

# பரிபூரண ஜீவன்
# PARIPOORANA JEEVAN

ஏனோக்கு
தேவனுக்குப் பிரியமானவனென்று
சாட்சி பெற்றான்.

எபிரெயர் 11:5

THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

July - August 2025
Volume : 65

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 4

# கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியத்தின் (SFC) மூலம் கோடை விமுமுறை நாட்களில் "கிறிஸ்துவின் நற்கந்தங்களாய்" என்ற தலைப்பில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற சீஷத்துவ பயிற்சி முகாம்கள்






















ஆசிரியரிடமிருந்து........!

## தேவனோடு நடந்த ஏனோக்கு



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இரட்சகர் இயேசுவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துக்கள்!

நமது வேதாகமம் அநேகமாயிரம் ஆச்சரியங்களை, படிப்பினைகளை, வாழ்க்கை வரலாறுகளை உள்ளடக்கிய ஒரு பொக்கிஷ பெட்டகம். வேதத்தில் ஏறத்தாழ 1181 ஆண்களின் பெயர்களும், 188 பெண்களின் பெயர்களும், இவற்றுள் சிலரின் வாழ்க்கைக் குறிப்புகளும் உள்ளது. இதில் மிகவும் சுருக்கமான, ஆனால் பிரகாசமான குறிப்பு ஏனோக்கை பற்றியது. முழு வேதாகமத்திலும் ஏனோக்கை பற்றி 5 இடங்களில் மட்டுமே கூறப்பட்டுள்ளது (ஆதி.5:18-24; 1 நாளாகமம் 1:13; லூக்கா 3:37; எபிரெயர் 11:5,6; யூதா:14,15). ஏனோக்கின் வாழ்வை பற்றிய தியானம் நம்முடைய வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.

ஏனோக்கின் வாழ்க்கை முறையைப் பற்றி தியானிக்கும் முன்பதாக அவரது சிறப்புகளை அறிந்து கொள்வோமா? ஏனோக்கு மூன்று காரியங்களில் முதன்மையானவரும், முன்னோடியுமாக திகழ்ந்தார். மனிதன் பாவத்தில் விழுந்த பின்பு, தேவனை மறந்து போன மனிதர் நடுவில், தேவனுடன் சஞ்சரித்த முதல் மனிதன் ஏனோக்கு. தீர்க்கதரிசிகளுள் முதன்மையானவர் ஏனோக்கு. மரணத்தை ருசி பாராமல் முதன் முதலில் உயிருடன் எடுத்துக் கொள்ளப்பட்டவர் ஏனோக்கு. மேலும் ஏனோக்கு என்றால் 'அர்ப்பணிக்கப்பட்டவன், ஒழுக்கமுள்ளவன்' என்று பொருள். அப்பொருளுக்கேற்ப வாழ்ந்தவர் தான் ஏனோக்கு. இந்த ஏனோக்கைக் குறித்து 3 புத்தகங்களிலிருந்து 3 வாழ்க்கைப் பாடங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இவைகள் கர்த்தருடைய வருகைக்கு நாம் ஆயத்தப்படுவதற்கு உதவியாக இருக்கும்.

### 1. ஏனோக்கு தேவனோடு நடந்தார் (ஆதியாகமம் 5:21-24)
### Enoch WALKED with God

ஆதாமின் ஏழாம் தலைமுறையில் ஏனோக்கு பிறந்தார். ஆதாம் முதற்கொண்டு ஏனோக்கின் தகப்பனாகிய யாரேத் வரை அனைவரும் மரித்தனர் மரித்தனர் என்று எழுதப்பட்டுள்ளது (ஆதி.5:5,8,11,14,17,20). ஆனால் "ஏனோக்கு தேவனுடன் சஞ்சரித்து கொண்டிருக்கையில் காணப்படாமற்போனான், தேவன் அவனை எடுந்துக் கொண்டார்" என்று காண்கிறோம் (ஆதி.5:24). ஏனோக்கு நோவாவுக்கு மூன்று தலைமுறைகள் முந்தினவர். ஏனோக்கு வாழ்ந்த காலத்தில் மனிதர்கள் தேவபயமற்ற, பொல்லாத, பாவிகளான சந்ததியாய் இருந்தனர். இத்தகையவர்கள் மத்தியிலே ஏனோக்கு தேவனுடன் நடக்கிறவராக, நீதிமானாக வித்தியாசமான வாழ்க்கை வாழ்ந்தவராக காணப்பட்டார்.

ஏனோக்கும் நம்மை போல குடும்பத்தை உடையவர் தான். ஏனோக்கு 65 வயதானபோது ஒரு மகனை பெற்று, தாம் தேவனிடத்தில் பெற்ற வெளிப்பாட்டின்படி, அவனுக்கு மெத்தூசலா என்று பெயரிட்டார். மெத்தூசலா என்பதற்கு "இவன் மரிக்கும் போது இது நடக்கும்" என்று பொருள். 'அவன் மெத்தூசலாவை பெற்றபின்பு, தேவனோடு சஞ்சரித்து கொண்டிருந்து குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்' என்று வாசிக்கிறோம் (ஆதி.5:21,22). ஆனால் இந்த குடும்பம், கடமைகள், பொறுப்புகள் எதுவுமே அவர் தேவனுடன் நடப்பதற்கு தடையாக இருக்கவில்லை. 65 ஆண்டுகள் தேவனுடன் நெருங்கிய தொடர்பில்லாதவராக இருந்த ஏனோக்கு, தனது 65வது வயது முதல், தேவன் அவரை எடுத்துக்கொண்ட நாள் வரைக்கும் 300 ஆண்டுகள் அனுதினமும், இடைவெளியின்றி, பின்மாற்றமின்றி, தொய்வின்றி தேவனுடன் நடந்தார்.

ஏனோக்கு தேவனை உண்மையாக நேசித்து, தன்னை அவருக்கு முழுமையாக அர்ப்பணித்து, தேவனுடன் மனமொருமித்து இருந்தபடியால் இது சாத்தியமாயிற்று. "இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தால் ஒழிய ஒருமித்து நடந்து போவார்களோ?" என்ற ஆமோஸ் 3:3ல் கூறப்பட்டுள்ளது. இவ்விதம் தேவனுடன் நடப்பது என்பது ஜெபவாழ்வை குறிக்கிறது. இன்று நம்முடைய அர்ப்பணம், ஜெப வாழ்வு எப்படி இருக்கிறது என்று ஆராய்ந்து, நிதானிப்போமாக. லூக்கா 21:36ல் எழுதியுள்ளபடி, நாம் மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருக்க வேண்டும்!

தேவனோடு நடப்பது என்பது தேவனுடைய திசையில் (walking in God's direction) மற்றும் தேவனுடைய வேகத்தில் (walking in God's pace) நடப்பதையும் குறிக்கும். ஆகவே நாம் தேவன் காட்டும் பாதையிலும் தேவன் நடத்தி செல்லும் வேகத்திலும் அவரோடு நடப்போமாக!

## 2. ஏனோக்கு தேவனுக்கு பிரியமாக வாழ்ந்தார் (எபிரெயர் 11:5)
## Enoch was WELL-PLEASING to God

இரண்டாவதாக ஏனோக்கின் வாழ்க்கை தேவனுக்கு பிரியமானதாக இருந்தது. 'ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே தேவனுக்கு பிரியமானவன் என்று சாட்சி பெற்றார்" என்று எபிரெயர் 11:5 கூறுகிறது.

ஏனோக்கு ஆதாமுக்குபின் சேத் வழியில் வந்த ஏழாம் தலைமுறையானவர் என்று பார்த்தோம். இது பரிசுத்த சந்ததி. ஆதாமுக்கு காயின் வழியில் வந்த ஏழாம் தலைமுறை நபர் லாமேக்கு. இது பாவ சந்ததி. ஏனோக்குடைய வாழ்வு பரிசுத்தமும். தேவனுக்கு பிரியமுமானதாக இருந்தது. லாமேக்கின் வாழ்வோ பாவம் நிறைந்ததும், தேவனுக்கு பிரியமற்றதுமாக இருந்தது. ஏனோக்கு நன்மை நிறைந்த காரியங்களில் முதன்மையானவரும், முன்னோடியுமாக இருந்தார். லாமேக்கோ இரு பெண்களை மணப்பது, கொலை செய்வது போன்ற தீய காரியங்களுக்கு முன்னுதாரணமாக விளங்கினான்.

தேவபயமும், பக்தியும் இன்றி, தேவனை அலட்சியப்படுத்தி வாழ்ந்த மனிதர் நடுவில் ஏனோக்கு தேவனுக்குப் பயந்து தேவனை பிரியப்படுத்துவதையே முழு மூச்சாக செயல்படுத்தி கொண்டிருந்தார். நம் ஆண்டவர் இயேசுவும் இவ்வுலகில் வாழ்ந்த 33 1/2 வருடங்களும் தேவனுக்கு பிரியமாகவே வாழ்ந்தார். இயேசுவை பற்றி பிதாவாகிய தேவன் இரு முறை "இவரில் பிரியமாய் இருக்கிறேன்" என்று (மத்.3:17;17:5) சாட்சி பகர்ந்தது போலவே, "நான் பிதாவுக்கு பிரியமானவை

களையே எப்பொழுதும் செய்கிறேன்" (யோவான் 8:29) என்று இயேசுவும் தம்மை குறித்து தாமே சாட்சி பகர்கிறதை வாசிக்கிறோம். இதன் வாயிலாக நாம் அறிய வேண்டியது என்ன? எப்போதாவது தேவனுக்கு பிரியமானதை செய்வதல்ல, எப்பொழுதும் தேவனுக்குப் பிரியமானதை செய்கிறதே உத்தமம்.

தேவனுக்கு பிரியமான காரியங்கள் என்னென்ன என்று வேதம் நமக்கு தெரிவிக்கிறது. தேவனை துதிப்பதும் (சங்.69:30), அவருக்கு உற்சாகமாய் கொடுப்பதும் (2 கொரி.9:7), எல்லா மனிதருக்காகவும் ஜெபிப்பதும் (2 தீமோ.2:1-3), நம் சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதும் (ரோமர் 12:21), நன்மையும், தானதர்மம் செய்வதும் (எபிரெயர் 13:16) தேவனுக்கு பிரியமானவைகள். இதற்கு மாறாக, மாம்சத்துக்குட்பட்டவர்களும் (ரோமர் 8.8), தற்பிரியரும், பணப்பிரியரும், சுகபோகப் பிரியரும் (2 தீமோ.3:1-4) தேவனுக்கு பிரியமானவர்களாக இருக்கவே முடியாது என்றும் வேதம் கூறுகிறது. இன்று நம் வாழ்வு தேவனுக்கு பிரியமானதாக காணப்படுகிறதா அல்லது நாம் நம்மையும், பிற மனிதரையும் பிரியப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறோமா என்று சீர்தூக்கி பார்ப்போம்.

மேலும் 1 கொரிந்தியர் 10:5-11 வசனங்களில் காண்கிற எச்சரிப்பின்படி, தேவன் வெறுக்கின்ற இச்சைகள், விக்கிரக ஆராதனை, வேசித்தனம், தேவனை பரீட்சித்தல், முறுமுறுப்பு ஆகியவற்றை முற்றிலும் விட்டுவிடுவோமாக. இவைகளை செய்த இஸ்ரவேலர்களிடத்தில் தேவன் பிரியமாயிருக்கவில்லை என்று வேதம் கூறுகிறது (1கொரி.10:5). அவர்கள் வனாந்திரத்தில் அழிக்கப்பட்டனர். நாம் அழிவிற்கு தப்பும்படி, சங்கீதம் 143:10, 19:14-ல் உள்ளபடியே, "உமக்கு பிரியமானதை செய்ய எனக்கு போதித்தருளும்; என் வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரியமாய் இருக்கட்டும்" என்று அன்றாடம் மன்றாடுவோமாக!. தேவனுக்கு பிரியமானவர்களாய் வாழ்வோமாக!

## 3. ஏனோக்கு தேவனுக்கு ஊழியம் செய்தார் (யூதா 14,15)
## Enoch WITNESSED for God

மூன்றாவதாக, யூதா எழுதின நிருபம் 14, 15ம் வசனங்களில் ஏனோக்கை பற்றி வாசிக்கிறோம். "கர்த்தர் பூமியை நியாயந்தீர்க்க திரும்பி வரப்போகும் கடைசி காலத்தை குறித்து ஏனோக்கு தீர்க்கதரிசனமாக உரைத்ததை காண்கிறோம். நாம் ஏற்கெனவே தியானித்தபடி, ஏனோக்கின் நாட்களில் மக்கள் அநீதியும், அவபக்தியும், அலட்சியமும், தேவ பயமுமின்றி வாழ்ந்தனர் என்று அறிவோம். ஏனோக்கு இம்மனிதர்களை பார்த்து 'ஆண்டவர் வரப்போகிறார், நியாயந்தீர்க்க போகிறார்', என்ற எச்சரிப்பின் செய்தியை சொன்னார். ஏனோக்கு தான் மட்டும் தேவனுடன் நடப்பதை எண்ணி, திருப்தியடைந்து, நின்றுவிடாமல், பிற மனிதர் அழியாதபடி காக்கப்பட தேவன் தரும் செய்திகளை அவர்களுக்கு அறிவித்து, மக்கள் தேவனை நோக்கி மனந்திரும்பத்தக்கதாக அவர்களை எச்சரித்தார்.

உலகத்தில் நீண்ட நாள் வாழ்ந்த மெத்துசலா, ஏனோக்கு செய்த ஊழியத்தின் நிரூபணமாக, அவர் தேவனிடமிருந்து பெற்ற வெளிப்பாட்டின் அடையாளமாக இருந்தான். மெத்துசலாவின் 969 வருட நீடிய ஆயுள் காலம் கர்த்தருடைய நீடிய பொறுமை என்னும் குணாதிசயத்தின் திருஷ்டாந்தமாக இருந்தது. இன்றும் கூட எல்லா மனிதரும் மனந்திரும்ப வேண்டும் என்று எண்ணி கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார் என்று 2 பேதுரு 3:9ல் வாசிக்கிறோம். நாம் வாழ்கிற இக்கிருபையின் காலத்திற்கு என்று வேண்டுமானாலும் முடிவு உண்டாகலாம். மெத்துசலாவின் ஆயுள் முடிந்தவுடன் பெருவெள்ளம் வந்து உலகம் அழிந்தது போல, இந்த கிருபையின் காலம் முடிந்தவுடன் உலகம் நியாயந்தீர்க்கப்படும்.

இன்று வரையில் தேவன் தமது திருவசனத்தின் மூலமாக நம்மை எச்சரித்து கொண்டே இருக்கிறார். பிரியமானவர்களே, தேவனின் எச்சரிப்புக்கு செவிகொடுத்து உடனடியாக முற்றிலுமாக தேவனை நோக்கி மனந்திரும்ப வேண்டியது மிகவும் அவசியம். ஆண்டவர் கிருபையுள்ளவர், இரக்கமானவர் என்று நம்மை நாமே தேற்றிக்கொண்டு பாவத்தில் நிலைநிற்போமெனில் நம் நிலை கவலைக்கிடமே. "அடிக்கடி கடிந்து கொள்ளப்படும், தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான்" (நீதி. 29.1) என்று வேதம் எச்சரிக்கிறது.

"நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, மனுஷகுமாரன் காலத்திலும் அப்படியே நடக்கும்" என்று (மத்.24:37) நம் கர்த்தராகிய இயேசுவும் நம்மை எச்சரிக்கிறார். இந்நிலையில் நமது பொறுப்பு என்ன? நம்மை சுற்றி வாழும் தேவனை அறியாத மக்களை எச்சரிப்பதுதான். இது நம் மேல் விழுந்த கடமை. இக்கடமையை குறித்து தேவன் நம்மிடம் கணக்கு கேட்பார் (எசே.3:17,18). 120 வருடங்கள் சோர்வின்றி நீதியை பிரசங்கித்த நோவாவின் வாழ்வும் (2 பேதுரு 2:5), வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்து 300 வருடங்கள் மக்களை எச்சரித்த ஏனோக்கின் வாழ்வும் நமக்கு சவாலாக அமையட்டும்!

அன்புக்குரியவர்களே, கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிற இக்காலகட்டத்தில் நாம் ஆண்டவராகிய இயேசுவின் வருகையை எதிர்பார்த்து வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? திடீரென்று ஒரு நாள் எக்காளம் தொனிக்கும். இயேசு மத்திய ஆகாயத்தில் வருவார். சபையை எடுத்துக் கொள்ளப் போகிறார் (1தெச.4:16-18). ஏனோக்கு தேவனால் உயிருடன் எடுத்து கொள்ளப்பட்டார். ஏனோக்குடைய வாழ்க்கையை போலவே நம்முடைய வாழ்க்கையும் கர்த்தருக்கு பிரியமானதாய் இருந்தால் நாமும் தேவனால் எடுத்துக் கொள்ளப்படுவோம். ஆயத்தப்படுவோம்! பரிசுத்தமாகவும், விழிப்பாகவும் இருப்போம்! மாரநாதா! அல்லேலுயா!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

## பரிசுத்த வேதாகமம்



- உலகத்திலேயே அதிகமான பேர் வாசிக்கும் புத்தகம் பரிசுத்த வேதாகமம். உலகிலேயே அதிகமாக விற்பனை செய்யப்படுகிற புத்தகமும் வேதாகமமே!
- மேலும் உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமம்! இந்த சாதனை சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
- கடந்த 2024 நவம்பர் மாத கணக்கின்படி முழு வேதாகமமும் 756 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- புதிய ஏற்பாடு மட்டும் மேலும் 1726 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- இது தவிர வேதாகம பகுதிகள் சுமார் 1274 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- இப்படி சுமார் 3756 மொழிகளில் வேதாகமத்தின் ஏதோ ஒரு பகுதி இன்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதினிமித்தம் சுமார் 650 கோடி பேர் வேதாகமத்தை தங்கள் சொந்த மொழிகளில் வாசிக்க முடியும்.



# ஆரோக்கியமான குடும்பம்

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**
Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary-Tamil District Council of SIAG

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் குடும்பம். சமுதாயம், திருச்சபை என்ற 3 பகுதிகளில் செயல்படவேண்டிய அவசியம் உண்டு. அநேக ஊழியர்களும், விசுவாசிகளும் இதை சமநிலையாக கையாளுவதில்லை. பெரும்பான்மையான நேரங்களில் குடும்பம் என்ற பகுதியில் தான் சமரசம் (Compromise) செய்கிறோம், அதன் விளைவுகளை சந்திக்கிறோம். ஒரு குடும்பம் ஆரோக்கியமாக, ஆசீர்வாதமாக இருக்க எளிய 10 வழிகளை கீழே தருகிறேன்.

**1. ஆண்டவரை மையப்படுத்தி வாழுங்கள் (God-Centered Family)**

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் (யாத்.20:3).

எல்லா பிரச்சனைகளுக்கும் பிசாசு காரணமாக இல்லாவிட்டாலும், பெரும்பாலான பிரச்சனைகளுக்கு அவன் ஒரு முக்கிய காரணம். ஆவிக்குரிய யுத்தத்தை ஆவிக்குரிய வழியில் தான் செய்ய வேண்டும். ஆகவே குடும்ப ஜெபங்கள். குடும்ப தியானங்கள், குடும்ப ஆராதனைகள், குடும்ப ஊழியங்கள் போன்றவற்றில் ஆண்டவரை மையப்படுத்தி குடும்பமாக செயல்படுங்கள்.

**2. தெளிவாக தொடர்பு கொள்ளுங்கள் (Communicate Clearly )**

நீங்கள் கேட்பதற்கு தீவிரமாகவும், பேசுவதில் பொறுமையாயும்...(யாக்.1:18).

பொறுமையாக கேட்பதும், தெளிவாக புரிந்துகொள்ளும்படி காரியங்களை செய்வதும் ஒரு ஆரோக்கியமான குடும்ப வாழ்விற்கு மிகவும் அவசியம். தரமான குடும்ப நேரங்களை செலவழியுங்கள். உங்களுடைய தொடர்புகள் தடையில்லா தொடர்புகளாக இருக்கட்டும்.

**3. தோழமை என்ற கருத்தை நடைமுறைப்படுத்துங்கள் (Practice Companionship )**

ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் (ஆதி.2:18).

சரீரத்திலும், மனதிலும், உணர்விலும் ஆவிக்குரிய பகுதிகளிலும் சரியாக பொருந்துகிற 'ஒருவரைத்தான்' ஆண்டவர் நமக்கு வாழ்க்கை துணையாக தருகிறார். ஆகவே, கணவன்-மனைவியாக அல்ல தோழனாக, தோழியாக பழக வேண்டும். தோழமை என்ற நடைமுறைப்படுத்தும்போது நெருக்கம் அதிகரிப்பதை உணரமுடியும். நம்பிக்கை வளரும், பாதுகாப்பு பெருகும், தியாகங்கள் கனப்படுத்தப்படும்.

**4. மூன்றாவது நபர் குறுக்கீட்டை தவிருங்கள் (Avoid the interference of third persons)**

இதனிமித்தம் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு... (ஆதி.2:24).

திருமணத்திற்கு பின்பு பெற்றோர்களை கைவிடவேண்டும் என வேதம் போதிக்கவில்லை. மாறாக மற்ற எல்லா உறவுகளை விடவும் திருமண உறவை மிக மேன்மையாக, உயர்வாக கருதவேண்டும். எக்காரணத்தை கொண்டும், 3வது நபரை அவர்கள் யாராக இருந்தாலும் திருமண உறவிற்குள் அனுமதிக்கக்கூடாது.

**5. அடிப்படை தேவைகளை உணர்ந்து கொள்ளுங்கள் ( Know the basic needs )**

அன்னாளே ஏன் அழுகிறாய் ... (1சாமு.1:8).

எல்க்கானா தன் மனைவியின் உணர்வுகள், மனஅழுத்தம், மற்றவர்களால் வரும் நிந்தனைகள், போராட்டங்கள் ஆகியவற்றை உணர்ந்ததால் அந்த குடும்பம் சாமுவேலை கொடுத்து தேசத்திற்கு, ஆசீர்வாதமாக மாறியது. வாழ்க்கை துணையின்/பிள்ளைகளின் அடிப்படை தேவைகளை உணருங்கள்.

**6. பொருளாதாரத்தை ஞானமாக கையாளுங்கள் (Handle finance carefully)**

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி... நிறைவாக்குவார் (பிலி. 4:19).

பொருளாதார தேவைகளுக்காக கர்த்தரை சார்ந்திருப்பதும் நம்புவதும், இருப்பதற்குள் திருப்திபடவும், ஞானமாக செலவழிக்கவும், கடன் வாங்காதிருக்கவும் தீர்மானித்தால் குடும்பங்கள் நிச்சயம் ஆசீர்வாதமாக காணப்படும்.

**7. பிள்ளைகளை கர்த்தருக்குள் வளருங்கள் (Grow the children in the Lord)**

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் (சங்.127:4).

பிள்ளைகள் ஆண்டவர் கொடுத்த பரிசு, அவர்களை அவருக்குள் பக்தியாக வளர்க்க வேண்டும் என்ற உணர்வு நமக்கு மிகவும் அவசியம். பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்படுவார்களாக. பிரபலமானவர்களாய் இருப்பதைவிட பரிசுத்தமுள்ளவர்களாய், பக்தியுள்ளவர்களாய் இருக்க அதற்கேற்றபடி வளர்க்க ஆண்டவர் உதவிசெய்வாராக.

**8. பிரச்சனைகளை உடனுக்குடன் சரிசெய்யுங்கள் (Resolve conflict quickly)**

சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது (எபே. 4:26).

எல்லா உறவுகளிலும் பிரச்சனைகள் உண்டு. ஆளத்துவ வேறுபாடுகளினால் (Personality conflict). கருத்து வேறுபாடுகளினால் (Ideological conflict) நிச்சயம் பிரச்சனைகள் வரும். ஈகோவை விட்டுவிட்டு பிரச்சனைகள் பெரிதாவதற்கு சத்துருவுக்கு இடம் கொடுக்காமல் உடனுக்குடன் பேசி சரிசெய்து கொள்ளுங்கள்.

**9. நெருக்கத்தை அதிகரியுங்கள் (Increase closeness)**

உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு (நீதி. 5:18).

உங்களுடைய வாழ்க்கை துணையோடே சரீர பிரகாரமாக உணர்வு ரீதியாக, மனரீதியாக, ஆவிக்குரிய பிரகாரமாக நெருக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய நெருக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதை ஆராய்ந்து பாருங்கள். குறைவான இடங்களை உடனே சரிசெய்யுங்கள்.

**10. பாலியல் உறவுகளில் திருப்தியாயிருங்கள் (Be satisfied in your sexual life)**

அவருடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக..(நீதி. 5:19).

மனைவியோடு சரியான உறவில் இல்லாதவர்கள் தான் பாலியல் பிரச்சனைகளில் சிக்கி அபிஷேகத்தை, குடும்பத்தை, ஊழியங்களை, கிருபைகளை, வரங்களை இழந்துவிடுகிறார்கள். திருமணத்திற்கு வெளியே பாலியல் உறவுகளை தேடாதிருங்கள். அது கர்த்தர் அருவருக்கிற பாவம். திருமண உறவிற்குள் பாலியல் உறவு சந்தோஷமானது. ஆசீர்வாதமானது.

இந்த 10 காரியங்களை குறித்து விரிவாய் எழுதுவதற்கு அநேக காரியங்கள் உண்டு. ஆனால் ஒரு சில வரிகளில் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருக் கிறேன். தொடர்ந்து இவைகளை குறித்து சிந்தியுங்கள்.

ஆண்டவர் தாமே நம்முடைய குடும்பங்களை ஆசீர்வாதமான, சந்தோஷமான குடும்பங்களாய் மாற்றுவாராக.



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்

Rev. P.S. ராஜமணி

**இனி நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்கள்** (பாகம் -3) ...தொடர்ச்சி

**கோகுடன் கூட்டுச் சேரும் நாட்டார்**

1. பெர்சியர்; 2) எத்தியோப்பியர்; 3) லீபியர் (எசே.28:5); 4) கோமேர்; 5) தோகர்மா (எசே.38:6).

இவர்கள் வட திசையிலிருந்து வருவார்கள் (எசே.38:15).

பெர்சியா என்பது இப்போதுள்ள ஈரான். 1935ல் இந்த பெயர் மாற்றம் ஏற்பட்டது. கோமர் என்பது ஜெர்மனி என்று சிலர் கருதுகின்றனர்.

**ஜெர்மனி**

2ம் உலக யுத்தத்திற்குப் பின் 1945 செப்டம்பர் 2ம்தேதி ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கிழக்கு ஜெர்மனி ரஷ்யாவுடன் இணைந்தது. 1961 ஆகஸ்ட் 13ம் தேதி கிழக்கு ஜெர்மனிக்கும், மேற்கு ஜெர்மனிக்கும், மத்தியில் பெர்லின் நகரில் சுவர் கட்டப்பட்டது. ரஷ்ய ஆட்சிக்குட்பட்டிருக்கிற கிழக்கு ஜெர்மனியிலிருந்து தப்பி ஓடி, மேற்கு ஜெர்மனிக்குள் வர முயன்ற ஏராளமானோர் கொல்லப்பட்டனர். இந்த பிரிவால் குடும்பங்கள், சொந்தக்காரர்கள் பிரிந்து வாழ்ந்தனர். கிழக்கு பெர்லின் மக்கள், மேற்கு பெர்லின்-க்கு போக சுமார் 2000 கி.மீ சுற்றி பயணம் செய்ய வேண்டி இருந்தது. இந்த சுவர் இடிக்கப்பட திரளான தேவ மக்கள் ஜெபித்து வந்தார்கள். உலகின் பல நாடுகளிலிருந்தும் பெர்லின் வந்து இந்த சுவரைத் தொட்டு இது உடைக்கப்பட வேண்டுமென்று ஜெபித்தவர்கள் பலருண்டு. ரஷ்ய ஆளுகையிலிருந்த கிழக்கு ஜெர்மன் மக்கள் வறுமையில் வாடினர். இந்த ஜெபங்களின் பலனாக 1989 நவம்பர் 9-11 தேதிகளில் பெர்லின் சுவர் திரள் கூட்ட மக்களால் தாக்கப்பட்டது. உடைத்து தரைமட்டமாக்கப்பட்டது. 1990 அக்டோபர் 3ம் தேதி கிழக்கு மேற்கு ஜெர்மனி ஒன்றாக இணைந்தன.

தோகர்மா என்பது அர்மேனியாவை குறிப்பதாக சொல்லப்படுகிறது. எசேக்கியேல் 38:12ல் இஸ்ரவேலுக்கு ஆதரவளிக்கும் நாடுகள் சேபா, தேதான் தேசத்தார், தர்ஷீசின் வர்த்தகர், அதினுடைய பாலசிங்கங்கள் அனைவரும் என்று கூறப்பட்டுள்ளது.

சேபா என்பது ஏடன் நாடு என்றும், தேதான் என்பது மஸ்கட் எனவும் சிலர் நம்புகின்றனர்.

தர்ஷீஸ் என்பது கிரேட் பிரிட்டனைக் குறிக்கும் என்று விளக்கம் கூறப்படுகிறது. ஆதி முதல் வெள்ளி, இரும்பு, தகரம், ஈயம் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு வியாபாரம் செய்து வந்துள்ளார்கள். கிரேட் பிரிட்டனின் அடையாளம் சிங்கம். தர்ஷீசின் வர்த்தகரும், அதினுடைய பாலசிங்கங்கள் அனைவரும் என்று எழுதப்பட்டுள்ளதால் பிரிட்டனின் பாலசிங்கங்களாக கருதப்படுவது அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து. இவை இஸ்ரவேலுக்கு உதவி செய்ய முன்வரும்.

### யுத்தம் நடக்கும் இடம்

எசேக்கியேல் 38:8ன்படி இது இஸ்ரவேலின் மலைகளில் நடைபெறும்.

### எப்போது நடைபெறும்?

- ❖ இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன் நடைபெறும்.
- ❖ எசேக்கியேல் 38:8-கடைசி வருஷங்களிலே வருவார்.
- ❖ எசேக்கியேல் 38:16-கடைசி நாட்களிலே இது சம்பவிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மகா உபத்திரவ காலத்திற்கு முந்தி நடைபெறும் என்பதற்கான பல காரணங்கள் உண்டு.

### 3ம் உலக மகா யுத்தம் அணு ஆயுதப்போராக இருக்கும்

2ம் உலக மகா யுத்தம் நடந்தபோது 1945 ஆகஸ்ட் 6ல் ஜப்பானில் ஹிரோஷிமா பட்டணம் மீதும், 9ம் தேதி நாகசாகி மேலும் முதன் முதலாக அணுகுண்டு போடப்பட்டன. சுமார் 2 லட்சம் பேர் உயிரிழந்தனர். இன்று வரை இந்த வட்டாரத்தில் பிறக்கும் பிள்ளைகள், செத்துப் பிறக்கின்றன அல்லது ஊனமுற்றுப் பிறக்கின்றன. இன்றுள்ள நவீன அணுகுண்டுகள், நியூட்ரான் குண்டுகள் முன்பு உபயோகித்த குண்டுகளைவிட இலட்சக்கணக்கான மடங்கு பயங்கர அழிவை உண்டுபண்ணக் கூடியவை.

### யுத்தத்தினால் ஏற்படும் விளைவுகள்

#### 1). பூமியதிர்ச்சி

எசேக்கியேல் 38:19ன்படி பெரிய பூமியதிர்ச்சி உண்டாகி, அதிக அழிவுண்டாகும், என் பிரசன்னத்தினால் பர்வதங்கள் இடியும், எல்லா மதில்களும் தரையிலே விழும்.

#### 2). கூட்டணிக்குள் குழப்பம்

- ❖ கூட்டணி ராணுவங்களுக்குள் கலகம் உண்டாகி, ஒருவரையொருவர் அழிப்பார்கள் (எசே.38:21).
- ❖ அக்கினி கந்தகம் பொழிந்து பெரும் அழிவு உண்டாகும் (எசே.38:22).
- ❖ உராய்ஞ்சுகிற சகலவித பட்சிகளுக்கும் இரையாவார்கள் என்பது ஆகாய விமானங்கள் ராக்கெட்டுகளை குறிக்கும் (எசே.39:4). இவைகளால் ஏராளமான பேர் மடிவார்கள்.

#### 3). இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படுவார்கள்

திரள்கூட்டம் பிணங்கள் பள்ளத்தாக்கிலே புதைக்கப்படும் (எசே.39:11). பிணங்களை புதைத்துத் தீர 7 மாதம் ஆகும் (எசே.39:12). எனவே இலட்சக் கணக்கானவர்கள் காடுகளிலும், மலைகளிலும் செத்து விழுவார்கள். பிணங்களை கண்டுபிடித்து புதைப்பதற்கென்று ஏராளமான பேர் நியமிக்கப்படுவார்கள். ஒரு பிணத்தை கண்டுபிடித்தால் அதன் அருகில் ஓர் அடையாளத்தை நாட்டி வைப்பார்கள். புதைக்கின்ற குழுவினர் வந்து அதை எடுத்து புதைப்பார்கள். இங்கே கூறப்பட்டுள்ள நிலையைப் பார்க்கும்போது இது அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட கதிரியக்க தாக்கத்தைக் குறிக்கிறது என எடுத்துக்கொள்ளலாம்.

"உன் வில்லை உன் இடது கையிலிருந்து தட்டிவிட்டு, உன் அம்புகளை உன் வலது கையிலிருந்து விழப்பண்ணுவேன்" (எசே.39:3).

எதிரியின் ஆயுதங்கள் சரியாக செயல்படாத அளவிற்கு கர்த்தர் குழப்பத்தை கட்டளையிடுவார் என்று தெரிகிறது. 7 மாதமும் பிணங்களைப் புதைப்பார்கள். ஏழு மாதங்கள் முடிந்த பின்பும் இன்னும் பிணங்களை தேடிக் கொண்டிருப்பார்கள். பிணங்கள் அழுகி கெட்டு எலும்புக்கூடுகளாக மட்டும் மிஞ்சியிருக்கும். ஒரு எலும்பைக் கண்டாலும் அதிலும் அணு கதிரியக்கம் இருப்பதால் அதை தொடாமல் பாதுகாப்புடன் வரும் ராணுவத்தினர் அதை எடுத்து எரிக்க வழி செய்வார்கள் (எசேக்கியேல் 39:14).

**ஆறு துறடுகளால் உன்னை இழுத்துவிடுவேன்: (எசே.38:4; 39:2)**

வடபுறத்திலிருந்து எழும்பி வரும் நாடாக ரஷ்யா இருக்கும். ரஷ்யாவுடன் கூட்டணியிலிருக்கும் ஆறு நாடுகள் நிர்ப்பந்தம்பண்ணப்பட்டு ரஷ்யாவுடன் இந்த யுத்தத்தில் ஈடுபடுத்துவார்கள்.

**4. ஏழு வருடம் ஆயுதங்களை எரிப்பார்கள்: (எசே. 39:10)**

இந்த மூன்றாம் உலக மகா யுத்தத்தினால் ஏராளமான ஆயுதங்கள் இஸ்ரவேல் நாடு எங்கும் சிதறிக் கிடக்கும். கி.மு. 600ல் வாழ்ந்த எசேக்கியேல், யுத்த ஆயுதங்களை கேடகங்கள், பரிசைகள், வில்லுகள், அம்புகள், வளைதடிகள், ஈட்டிகள் என்று விவரித்துள்ளார். இதற்கு இணையான நவீன ஆயுதங்கள் யுத்தத்தில் பயன்படுத்தப்படும். வேறு எந்த எரிபொருட்களையும், மக்கள் பயன்படுத்தாமல் இந்த ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே இன்று பயன்படுத்தப்படும் நவீன ஆயுதங்களின் எரிபொருட்களாலான ஆயுதங்கள் ஏராளம் இருக்கும்.

**லிக்னோஸ்டோன் *(Lignostone)***

உதாரணமாக, ரஷ்யர்கள் பயன்படுத்தும் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களை தயாரிக்க லிக்னோஸ்டோன் என்ற மரத்தை பயன்படுத்துகிறார்கள். இந்த மரம் அதிக அழுத்தத்திற்கு உட்படுத்தப்பட்டு இரும்பை விட, உறுதியானதாக மாறுகிறது. நிலக்கரியை விட அதிக அழுத்தமுள்ளது. இது போன்ற எரியும் தன்மையுள்ள பொருட்களை ஆயுதங்களாக பயன்படுத்துவதால் விட்டுச் சென்ற ஆயுதங்களை இஸ்ரவேலர் எடுத்து ஏழு வருடம் எரிப்பார்கள்.

**5. புதிய தேவாலயம் கட்டப்படும்**

மூன்றாம் உலக மகாயுத்தத்தினால் பூமியதிர்ச்சி உண்டாகி, ஏராளமான கட்டிடங்கள் தரைமட்டமாக இடிந்துவிழும் என்று பார்த்தோம். இதில் தேவாலயம் இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள மசூதியும் (Dome of the Rock) இடிந்து தரைமட்டமாகும். இந்த இடத்தில் எல்லா மக்களுக்கும், பொதுவான ஓர் ஆலயம் கட்டப்படும். யூதர்கள், முஸ்லீம்கள் மற்றும் பிற மதத்தினர் ஏற்றுக்கொள்ளும்படி அந்திகிறிஸ்து வழி செய்வான்.

"என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு" என்பது உறுதி செய்யப்படும் (ஏசாயா 56:7).

தொடரும்...



# ஓசியா

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

**பெரிய தீர்க்கதரிசிகளும், சிறிய தீர்க்கதரிசிகளும்:**

தங்கள் தீர்க்கதரிசனங்களைப் புத்தகமாக எழுதிய தீர்க்கதரிசிகள் மொத்தம் 16 பேர் ஆகும். ஏசாயா முதல் மல்கியா வரையுள்ள புத்தகங்களை இவர்கள் எழுதினர். புலம்பல் புத்தகத்தையும் எரேமியாவே எழுதினான்.

இந்த 16 புத்தகங்களில் ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் ஆகியவை பெரிய புத்தகங்களாக வடிவமைக்கப்பட்டபடியால் அவை "பெரிய தீர்க்கதரிசனப் புத்தகங்கள்" என அறியப்படுகின்றன. ஓசியா முதல் மல்கியா வரையுள்ள 12 புத்தகங்கள் சிறிய புத்தகங்களாக உள்ளதால் அவை "சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள்" என அழைக்கப்படுகின்றன.

இக்கட்டுரையில் **ஓசியா** புத்தகத்தைப் பற்றிக் காணலாம்.

**ஒரே காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள்:** (கி.மு 800-700)

**ஓசியா** வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலில் பிறந்து அங்கேயே ஊழியம் செய்தான். இவன் **தேவனுடைய அன்பை** வலியுறுத்தி பேசினான்.

**ஆமோஸ்** தெற்கு ராஜ்யமாகிய யூதாவில் பிறந்து, வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலுக்குச்சென்று அங்கே ஊழியம் செய்தான். இவன் **தேவனுடைய நீதியை** வலியுறுத்திப் பேசினான்.

**யோனா** வடக்கு ராஜ்யத்தைச் சேர்ந்தவன். வடக்கு ராஜ்யத்தில் சுமார் 50 ஆண்டுகள் ஊழியம் செய்த பின்புதான் நினிவேக்குச் செல்லும்படி சிறப்பு அழைப்பைப் பெற்றான்.

**ஏசாயா, மீகா** ஆகியோர் தெற்கு ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் சொந்த தேசமாகிய யூதாவிலேயே ஊழியம் செய்தனர். ஏசாயா தேவனுடைய பரிசுத்தத்தை வலியுறுத்திப் பேசினான். (மீகாவின் செய்திகளில் பல வடக்கு ராஜ்யத்துக்கும் கொடுக்கப்பட்டன). இவர்களெல்லாரும் விக்கிரகங்களை நாடிச்சென்றுவிட்ட ஜனங்களுக்கு (நியா.3:10-12) கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாக அறிவித்தனர்.

**ஓசியாவைப் பற்றிய அறிமுகம்:**

இவன் 'அன்பின் தீர்க்கதரிசி' என்று அறியப்படுகிறான். தனது வாழ்க்கை முழுவதுமே சோகம் நிறைந்தவனாய் வாழ்ந்தான். தனது தீர்க்கதரிசனங்களைக் கவிதைகளாக தந்துள்ளான். இவனுடைய தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டைப்போல சுவிசேஷ வாசனையுள்ளனவாய்க் காணப்படுகின்றன.

'ஓசியா' என்ற பெயருக்கு 'இரட்சிப்பு', 'மீட்பு' மற்றும் 'விடுதலை' என்ற அர்த்தங்கள் உண்டு. எபிரெய மொழியில் 'யோசுவா' என்ற பெயரும், கிரேக்க மொழியில் 'இயேசு' என்ற பெயரும் ஓசியா என்ற மூலப் பெயரிலிருந்து வந்தவை தான்.

ஓசியாவின் தகப்பனுடைய பெயர் பெயோரி(1:1). இஸ்ரவேல் தேசம் கிமு722ல் முற்றிலும் அழிந்து சிறைப்பட்டு அசீரியாவுக்கும் அதன் சாம்ராஜ்ய எல்லைகளுக்கும்

சிதறடிக்கப்பட்டது. அதன் அழிவுக்கு சற்றுமுன்பு ஓசியா தனது தீர்க்கதரிசன வார்த்தைகளை எடுத்துரைத்தான். தன் காலத்திலுள்ள மார்க்கம், அரசியல் ஆகியவற்றிலுள்ள சீர்கேட்டைக் கண்டித்தான். இவன் மிகவும் சாதுவான குணம் படைத்தவன். எளிதில் சோகத்தில் மூழ்கக்கூடியவன். எதையும் சட்டென்று துடுக்காகப் பேசும் கூர்மையுடையவன். தேசப்பற்று மிகுந்தவன். இவன் இரத்த சாட்சியாய் மரித்தான் என்று நம்பப்படுகிறது.

**ஓசியாவின் குடும்பம்:**

- **ஓசியாவின் மனைவி, கோமேர்**

ஓசியா முதலாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபடி ஓசியா பரிசுத்தமாய் வாழ்ந்த ஒரு தீர்க்கதரிசி. ஒரு வேசியை (அல்லது) விபச்சார ஸ்திரீயைத் திருமணம் செய்யும்படி ஆண்டவர் அவனுக்குச் சொன்னார். வேசியாய் வாழ்ந்த **கோமேர்** என்பவளை ஓசியா தனது மனைவியாகச் சேர்த்துக்கொண்டான்.

ஓசியா 3-ம் அதிகாரத்தில் கோமேர் மறுபடியும் அவனுக்குத் துரோகம் செய்து தனது பழைய வாழ்க்கைக்குத் திரும்பிச் சென்றுவிடுகிறாள். அவளை ஓசியா திரும்பவும் சேர்த்துக்கொண்டான். ஒன்றாம் அதிகாரத்திலும் மூன்றாம் அதிகாரத்திலும் வரும் பெண் ஒருத்தியே, வெவ்வேறு பெண்களல்ல.

இந்த ஓசியா, பரிசுத்தமான அன்பின் தேவனாகிய யெகோவாவுக்கு அடையாளம். அவன் திருமணம் செய்துகொண்ட வேசிப்பெண் யெகோவா தேவனைவிட்டு விக்கிரக வழிபாட்டிற்குச் சென்றுவிட்ட இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கிறது. வேசியாய் வாழ்ந்த அவளை ஓசியா தனது மனைவியாகச் சேர்த்துக்கொண்ட செயலானது சோரம்போன இஸ்ரவேல் தேசத்தை யெகோவா தேவன் மன்னித்துத் தம்முடைய மணவாட்டியாகச் சேர்த்துக்கொண்ட செயலுக்கு ஒப்பனையாகவுள்ளது.

**ஓசியாவுக்கும் கோமேருக்கும் மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள்:**

- இவர்களது முதலாவது மகனுடைய பெயர் **யெஸ்ரயேல்.** இப்பெயருக்கு கர்த்தர் பழிவாங்குவார் சிதறடிப்பார் என்ற அர்த்தங்கள் உண்டு.
- **லோருகாமா** என்ற பெயருடைய மகள் இரண்டாவதாகப் பிறந்தாள். இப்பெயருக்கு ''இரக்கஞ்செய்வதில்லை'' என்று பொருள். விக்கிரக ஆராதனையில் இருக்கும்வரை தேவன் அவர்களுக்கு இரக்கஞ்செய்வதில்லை என்பதை இது குறிக்கிறது. ஆனால் பின்னர் கடவுள் இரக்கம் செய்வார் என்பதைக் குறிக்கும் வகையில் இப்பெயர் "ருகாமா" என மாற்றப்பட்டது. 'கர்த்தர் மீண்டும் இரக்கம் செய்வார் என்பது இதன் பொருள்.
- மூன்றாவது பிறந்த மகனுக்கு **லோ-அம்மி,** அல்லது லோகம்மா என்று பெயர் இதன் அர்த்தம் 'நீங்கள் என் ஜனமல்ல, நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை' என்பதாகும். இது கடவுள் அவர்களைத் தற்காலிகமாக நிராகரித்ததைக் காட்டுகிறது.

ஓசியாவின் மனைவி செய்த வேசித்தனம் இஸ்ரவேலின் விக்கிரக ஆராதனையையும், ஜனங்கள் கர்த்தரிடமிருந்து விலகிச் செல்வதையும் காட்டுகிறது. அவர்களுடைய மூன்று குழந்தைகளும் இஸ்ரவேல் தேசத்தின் எதிர்காலத்தையும் கடவுளின் மீட்பின் திட்டத்தையும் குறிப்பிடுகின்றன. மூன்று பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்ட பெயர்கள் பாவம்செய்து கெட்டுப்போன இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கர்த்தரிடத்திலிருந்து வந்த நியாயத்தீர்ப்பைக் குறித்தன.

**ஓசியா வாழ்ந்தகால மார்க்க பின்னணி:**

ஓசியாவின் திருமணமானது இஸ்ரவேல் தேசம் தன் நாயகனாகிய யெகோவா தேவனுக்குத் துரோகம் செய்த செயலினைப் படம் பிடித்துக்காட்டிற்று. பல வேத

பண்டிதர்களும் இதனை ஆவிக்குரிய வேசித்தனமாகிய விக்கிரக ஆராதனை என்கின்றனர். (ஏசா.57அதி; எசே.16 அதி). அவள் உண்மையிலேயே வேசி அல்ல, அது ஞான அர்த்தமாய் சொல்லப்பட்டுள்ளது என்கின்றனர். எனினும் அடிப்படைவாதிகளான (Conservative Scholars) அறிஞர் பலர் உண்மையிலேயே விபச்சாரியாய் வாழ்ந்த ஒருத்தியைத்தான் ஓசியா திருமணம் செய்தான் என நம்புகின்றனர்.

அன்றுள்ள விக்கிரக ஆராதனை எல்லாவற்றிலுமே வேசித்தனமும், விபச்சாரமும் அவர்களது ஆராதனையின் ஒரு பகுதியாகவே காணப்பட்டது என்பதை நாம் விளங்கிக்கொண்டால், இதனைப் புரிந்துகொள்ளுவது எளிது.

அக்காலத்தில் **பாகால்,** தாகோன், அசேரா, அஸ்தரோத்து என்பவைகள் கானானியர் வணங்கிய பிரதானமான தெய்வங்கள் ஆகும். இந்த தேவர்களுக்கு ஆராதனை செய்ய உயர்ந்த மேடைகளும் பீடங்களும் பயன்படுத்தப்பட்டன. ஆண் தெய்வங்களைக் குறிக்கக் கல்லினால் செய்யப்பட்ட சிலைகளும், பெண் தேவதைகளைக் குறிக்க மரத்தினால் செய்யப்பட்ட சிலைகளும் செய்யப்பட்டு ஆராதிக்கப்பட்டன. பூஜை செய்ய ஆசாரியர்களும், பூசாரிகளும் ஏராளமாயிருந்தன.

இவ்வித பூஜைகளிலும், ஆராதனைகளிலும், திருவிழாக்களிலும் ஆண்களும் பெண்களும் ஒருங்கே பங்குபெற்றனர்.. மலடியான ஒரு பெண் கர்ப்பந்தரிக்கச் செய்யப்படும் பூஜைகள், மலட்டுத்தன்மையுடைய ஒருமிருகம் கருத்தரிக்கச் செய்யப்படும் விசேஷித்த பூஜைகள், தரிசாய்க் கிடக்கும் மலட்டுநிலம் விளைச்சலைப் பெறச் செய்யப்படும் பூஜைகள் போன்றவை இவர்களது ஆராதனையில் ஒரு பகுதியாகவே காணப்பட்டது. இவை காம எண்ணங்களைத் தூண்டுவனவாகவும், வேசித்தன செயல்பாடுகள் நிறைந்தனவாகவும் காணப்பட்டன. சடங்குகள், ஆராதனைகள் என்ற போர்வையில் வேசித்தனங்களும் பிற ஈனமான முறைகேடுகளும் அப்பட்டமாக கானானியரின் வழிபாட்டு ஸ்தலங்களிலும் மலிந்து காணப்பட்டன.

ஓசியாவின் மனைவியாகிய கோமேர் இவ்வித மார்க்கப் பின்னணியிலிருந்து வந்தவளே. எனவே அவள் விபச்சாரியாக வாழ்ந்தவள் என்று எடுத்துக்கொள்ளவும் இடமுண்டு. நமது ஊர் தேவதாசிகள் பின்னணியங்களை இத்துடன் ஒப்பிடலாம்.

**ஓசியா வாழ்ந்த அரசியல் பின்னணி:**

வடக்கு இராஜ்யமாகிய இஸ்ரவேல் ஜனங்கள் "எப்பிராயீம்" என்று இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஓசியாவின் காலத்தில் வடக்கு இராஜ்யத்தில் யோவாசின் குமாரனாகிய இரண்டாம் யெரொபெயாம் ஆட்சி செய்து வந்தான். இக்காலத்தில் தெற்கு ராஜ்யமாகிய யூதாவில் உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகியோர் ஆண்டு வந்தனர்.

இக்காலத்தில் தேசத்தில் யுத்தமில்லாதிருந்தது. விளைவின் பலன்கள் பெருகி பசுமைப்புரட்சி நடந்த காலம் அது. பொருளாதாரச் செழிப்பு விக்கிரகங்களுக்குச் செய்யும் ஆராதனைகளின் பெருக்கத்துக்கு வழிவகுத்தது. யெரொபெயாம் ராஜா பொல்லாதவனாயிருந்து விக்கிரக வழிபாட்டைப் பெருக்கினான். கிமு 753ல் அவன் மரணமடைந்தான். இவனுக்குப்பின் தேசம் ஸ்திரத்தன்மையை இழந்து பல அரசர்கள் கொலை செய்யப்பட்டு தேசம் அழிவின் திசை நோக்கிச் சென்றது. மேலும், கிமு 722ல் அசீரியா இஸ்ரவேலை தோற்கடித்து மக்களைச் சிறையாகக் கொண்டு சென்றது.

**ஓசியா புத்தகச் சம்பவச் சுருக்கம்:**

இஸ்ரவேல் என்னும் வடக்கு இராஜ்யம் தன்னை இரட்சித்து, நேசித்து உடன்படிக்கையின் மூலம் தமது சொந்த மணவாட்டியாக்கிக் கொண்ட யெகோவா

தேவனை விட்டுவிட்டாள். (யூதா என்னும் தெற்கு ராஜ்யமும் தன் தேவனுடன் இதே உறவு விரிசலில்தான் காணப்பட்டாள்).

இந்தச் சூழலை படம்பிடித்துக் காட்டத் திட்டமிட்ட தேவன், ஓசியா என்ற தமது தீர்க்கதரிசியை ஒரு வேசியைத் திருமணம் செய்யச் சொல்லுகிறார். ஆண்டவருக்குக் கீழ்படிந்து ஓசியா கோமேர் என்னும் வேசியைத் திருமணம் செய்துகொள்கிறான். அவள் மூலம் அவர்களுக்குப் பிள்ளைகளும் பிறக்கிறார்கள். எனினும், அவள் பின்னும் தனது வேசித்தன வாழ்க்கையைத் தொடரும்படி ஓசியாவை விட்டுச் சென்றுவிடுகிறாள்.

அப்படி அவள் சென்றுவிட்டாலும் திரும்பவும் அவளை உன்னிடமாக உன் மனைவியாகச் சேர்த்துக்கொள் என்று ஆண்டவர் அவனுக்குக் கட்டளையிடுகிறார்.

ஓசியா ஒரு வேசியைத் தனக்கு மனைவியாகச் சேர்த்துக்கொண்ட இந்த சம்பவம் இஸ்ரவேல் ஜனங்களுடன் யெகோவா தேவனுக்கிருந்த உடன்படிக்கை உறவுக்கு அடையாளமாகக் காணப்படுகிறது. ஓசியாவின் வாழ்க்கையின்மூலம் இஸ்ரவேலரின் கீழ்படியாமையிலும், ஒழுக்கமற்ற வாழ்க்கையிலும் தமது நிலையான உண்மையுள்ள அன்பில் அவர்களை நடத்தும் தமது காருண்யத்தை தேவன் விளக்குகிறார்.

மூன்று காரியங்களை இப்புத்தகச் சம்பவச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- **நிராகரிப்பும் துரோகமும் (Rejection and Betrayal):** ஓசியாவின் மனைவியாகிய கோமேர் அவனை விட்டுவிட்டு தனது பழைய நாயகர்களைத் தேடிச் செல்கிறாள். இது இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் உண்மை தெய்வமாகிய யெகோவாவை விட்டு, விக்கிரகங்களை வணங்குவதற்கும் வேசித்தனம் செய்வதற்கும் சென்ற செயலுக்கு இணையான செயலாகும்.
- **நிராகரிப்பும் ஒழுக்கமும் (Rejection and discipline):** இஸ்ரவேல் தம்மை நிராகரித்ததுபோலவே கர்த்தரும் அவளை நிராகரிப்பார். பிற வல்லரசுகள்; வந்து இஸ்ரவேலையும் யூதாவையும் முறியடித்து சிறைப்பிடித்துச் செல்வார் இவர்கள் வாக்குத்தத்த தேசத்திலிருந்து துரத்துண்டுபோவார்கள்.
- **உயிர்மீட்சியின் மறுசீரமைப்பும் ஒப்புரவாகுதலும் (Restoration and Reconciliation):** மறுபடியும் வேசிமார்க்கத்துக்கு திரும்பி போய்விட்ட தனது மனைவியைத் திரும்பச் சேர்த்துக் கொண்டுவந்த ஓசியா அவளை நேசித்தான். இதைக்காட்டிலும் மேலான விதத்தில், இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் தாம் வைத்திருந்த அன்பை தேவன் விட்டுவிடவில்லை; அவர்களுக்கு தாம் கொடுத்த வாக்குத்தத்தங்களையும் இன்னும் நினைவுகூருவார். வாக்குத்தத்த தேசத்துக்கு மீண்டும் அவர்களைக் கொண்டு வருவார்.

'பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி கடைசிநாட்களில் கர்த்தரையும் அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் (நடுக்கத்துடன்) வருவார்கள் (3:5).

ஓசியாவின் செய்திகள் கடுமையானவை. எனினும் அவை மென்மையான அன்பின் வார்த்தைகளாக வெளிவந்தாலும் இதயத்தை உடைக்கும் தீர்க்கதரிசனச் செய்திகளாய் உரைக்கப்பட்டன. தமக்கு முன்பாக துரோகம் செய்த ஒரு தேசத்துக்கு 'இன்னும் நான் உன்னை நேசிக்கிறேன்' என்ற தேவனுடைய வார்த்தைகளை இப்புத்தகத்தில் பார்க்கிறோம்.

**ஓசியா புத்தகத்தின் கருப்பொருள் வசனம்:**

பின்பு கர்த்தர் என்னை நோக்கி: அந்நிய தேவர்களை மதித்து, திராட்சரசமுள்ள பாத்திரங்களை விரும்புகிறவர்களான இஸ்ரவேல் புத்திரர்பேரில் கர்த்தர் வைத்திருக்கிற அன்புக்கு ஒப்பாக நீ இன்னும்

போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும், விபசாரியுமான ஒரு ஸ்திரீயை நேசித்துக்கொள் என்று சொன்னார் (ஓசியா 3:1).

**ஓசியா புத்தகத்தின் பொருளடக்கம்:**

I. இஸ்ரவேலுடன் தேவனுடைய உறவை விளக்கும் பகுதி, ஓசியா 1-3 அதிகாரங்கள்

- இஸ்ரவேல் தேவனுக்கு உண்மையில்லாதவளாக இருந்ததுபோலவே ஓசியாவின் மனைவியாகிய கோமேரும் உண்மையற்றிருக்கிறாள்.
- மறுபடியும் தன் விபச்சார வாழ்க்கைக்குச் சென்றுவிட்ட தனது மனைவியை, யெகோவா இஸ்ரவேலுக்குச் செய்ததுபோலவே, ஓசியா திருப்பிக்கொண்டு வருகிறான்.

II. இஸ்ரவேலுக்கென தேவன் வைத்திருந்த திட்டத்தை ஓசியா விளக்குகிறான், ஓசியா 4-13 அதிகாரங்கள்

- தேவனுக்கு விரோதமான இஸ்ரவேலரின் விக்கிரக ஆராதனை, (4-7).
- இஸ்ரவேலருக்கு உடனே வரவிருந்தத் தண்டனை, (8-10).
- தேவகரத்திலிருந்து வரும் அன்பின் சிட்சை (11-13).
- மறுவாழ்வும், மறுசீரமைப்பும் தருவேன் என்ற வாக்குத்தத்தம் (14).

சீர்கெட்ட தமது ஜனங்களைத் தம்மண்டைத் திருப்ப ஓசியா என்ற தீர்க்கதரிசியையும் அவனது குடும்பத்தையும் பாடமாக எடுத்து தமது அன்பை, தேவன் வெளிப்படுத்துகிறார். கீழ்படியாத தம் மக்களுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு என்பதை தீர்க்கதரிசியின் மூலமாய் எடுத்துரைக்கிறார். கிமு 722ல் (2இரா.17 அதி) நடந்த வடக்கு ராஜ்ய சிறையிருப்பே இந்த நியாயத்தீர்ப்பு. இன்று நமக்கும் தம்முடைய அளவில்லாத அன்பையும், நியாயத்தீர்ப்பின் எச்சரிப்பையும் தேவன் தந்துக்கொண்டேயிருக்கிறார்.

இப்புத்தகத்தின் கடைசி ஐந்து வசனங்கள் (14:5-9) வாக்குத்தத்தமாகவும், எச்சரிப்பாகவும், உபதேசமாகவும் அன்றைய இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தரப்பட்டுள்ளது. இதை இன்று நமக்கும் உரிமையாக்கிக்கொள்ளலாம்.

நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன். அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான். லீபனோனைப்போல் வேரூன்றி நிற்பான்.

அவன் கிளைகள் ஓங்கிப்படரும். அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப்போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப்போலவும் இருக்கும்.

அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள்; தானிய விளைச்சலைப்போலச் செழித்து, திராட்சச்செடிகளைப்போலப் படருவார்கள்; அவன் வாசனை லீபனோனுடைய திராட்சரசத்தின் வாசனையைப்போல இருக்கும்.

இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன என்று எப்பிராயீம் சொல்லுவான்; நான் பச்சையான தேவதாரு விருட்சம் போலிருக்கிறேன்; என்னாலே உன் கனியுண்டாயிற்று என்று எப்பிராயீம் சொல்லுவான்.

இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்.

ஆமென்! ஆமென்! ஆமென்!



# வேதாகமத்தில் ஆதியாகமத்தின் வசனத்தை கொண்டு Chloroform கண்டுபிடித்த

## ஜேம்ஸ் யங் சிம்ப்சன்

குளோரபாம் என்ற மருந்தை கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் யங் சிம்ப்சன் என்பவர் இவர் ஒரு பெரிய விஞ்ஞானி ஆவார். மயக்க மருந்து Chloroform-ஐ கண்டுபிடித்தது மருத்துவ துறைக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி.

ஸ்காட்லாந் தேசத்து ஒரு பேக்கரி கடைக்காரர்களுக்கு 7வது மகனாக பிறந்தவர்தான் இந்த ஜேம்ஸ் யங் சிம்ப்சன். இவர் தனது 21 வயதில் மருத்துவ பட்டம் பெற்றார். மருத்துவம் படிக்கும்போதே அலர்ஜியால் ஏற்படும் இறப்பு பற்றி ஆராய்ச்சி கட்டுரை எழுதினார். இவரின் திறமையை கண்ட நோய் பொறியியல் பேராசிரியர் ஜான் தாம்சன் சிம்ப்சனை தனது உதவியாளராக நியமித்தார். 1840-ல் மகப்பேரு மருத்துவர் பட்டம் பெற்றார்.

தேவபக்தியுள்ள சிம்ப்சனை ஒருமுறை வேதத்தில் ஆதியாகமத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போது அதில் தேவன் முதல் மனிதன் ஆதாமிலிருந்து ஏவாளை உருவாக்கிய விதத்தை வாசித்துக் கொண்டிருந்தார். அதில் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி அவரின் விலா எலும்பை எடுத்து அந்த இடத்தை சதையினால் மூடினார். அந்த விலா எலும்பைக் கொண்டு ஒரு பெண்ணை உருவாக்கினார் என்ற பகுதியை வாசித்தார்.

இந்த பகுதியை வாசித்தபோது தான் Chloroform கண்டுப்பிடிப்பிற்கான விதை ஜேம்ஸ் யங் சிம்ப்சனின் உள்ளத்தில் விழுந்தது. உடலில் சிறுகாயம் ஏற்படும்போது வேதனை உண்டாவது இயற்கை. ஆனால் ஆதாமோ தன் உடலின் விலா எலும்பை எடுக்கும்போதுகூட எந்த வலியும் இல்லாமல் அயர்ந்த நித்திரையில் இருந்தது எப்படி என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

இப்படி யோசித்துக்கொண்டிருந்த சிம்ப்சனின் சிந்தனைகள் பல ஆய்வுக்கு பின் ஒரு நாளில் செயல்வடிவம் பெற்று Chloroform மாக வெளிவந்தது.

இப்படிப்பட்ட தேவ மனிதன் ஒருமுறை எடின்பர்க் பல்கலைகழகத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது மாணவர் ஒருவர் இவரிடம் உம்முடைய முதல் கண்டுபிடிப்பு எது என்ன கேட்டார். அதற்கு அவர் சொன்ன பதில் என்னவென்றால் 1861 ஆண்டு கிறிஸ்துமஸ் நாள் அன்று காலையில் நான் ஒரு பாவி என்றும் இயேசு கிறிஸ்து என் இரட்சகர் என்று கண்டுபிடித்ததுதான் என்றார். எல்லா மாணவர்களும் இவர் Chloroform என்று சொல்லுவார் என எதிர்பார்த்தனர். ஆனால் அவரின் பதிலை கேட்டு ஆச்சரியப்பட்டனர். கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் சாதனையாளராகவே படைத்திருக்கின்றார். தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் கர்த்தரின் நாமத்தை குறித்து மேன்மை பாராட்ட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்.

சங்கீதம் 20 அதிகாரத்தில் தாவீது எழுதும்போது சிலர் இரதங்களைக் குறித்தும், குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம் என்கிறார். ஆம் பிரியமானவர்களே! மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன். இவைகளின் மேல் நான் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

ஆம் பிரியமானவர்களே! நம்முடைய மேன்மை என்ன? நம்முடைய பெருமை என்ன? நான் செய்தேன், என்னாலே என்ற பெருமையை தேவன் வெறுக்கிறார். இதில் நாம் ஜாக்கிரதையாக இருப்போம். கர்த்தர் நம்மை கொண்டு செய்வது எல்லாமே அவருடைய நாம மகிமைக்காகவே செய்கிறார். அதனால் தேவனுக்கே மகிமை. அவரையே மேன்மைப்படுத்துவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

Courtesy : True Life Mission

ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# கர்த்தருக்கு பிரியமான வழியில் பணத்தை சம்பாதிப்பது எப்படி?

### பகுதி - 1

நாம், உயிர்வாழ உணவிற்காக, அடிப்படை தேவைகள் சந்திக்கப்பட, பிள்ளைகளின் எதிர்காலத் தேவைகள் சந்திக்கப்பட, கைத்தொழில் மூலமாக வியாபாரம் செய்து, உத்தியோகம் செய்து, பகுதிநேர வேலைசெய்து மற்றும் வாடகை மூலமாக பணத்தைச் சம்பாதிக்கிறோம். வியாபாரத்தில் நியாயமான இலாபத்தைப் பெறுவது தவறல்ல. ஆனால் அநியாயமான இலாபத்தைப் பெறுவது ஆசீர்வாதமல்ல. அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், பொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாய் இருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு தன் முடிவிலே மூடனாயிருப்பான் (எரே.17:11).

பிறருக்கு சொந்தமானதை அதற்குரிய கிரயத்தைக் கொடுக்காமல் ஏமாற்றியோ அல்லது பலாத்காரமாக பறித்தோ நமக்கு சொந்தமாக்கிக் கொள்வதே திருடுவதாகும். கள்ளத்தராசு, கள்ளப்படிகளைப் பயன்படுத்தி பிறருடைய இழப்பில் நாம் இலாபம் அடைய நினைப்பதே ஏமாற்றி சம்பாதித்தலாகும். மனசாட்சிக்கு விரோதமாய் சட்டவிரோதமான முறையில் பணம் சம்பாதிப்பதும், குறைவான முதலீட்டில் மிதமிஞ்சிய இலாபத்தை குறுகிய காலத்தில் எதிர்பார்ப்பதும் சூதாட்டமாகும் அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும் (நீதி.10:2).

அநியாய வட்டிக்கு விட்டு, குறுக்கு வழியிலோ அல்லது சூதாடியோ, பிறரை ஏமாற்றியோ அநியாய இலாபத்திலோ சம்பாதிக்கக்கூடாது. இளம் வயதிலே கர்த்தருக்கு பிரியமான வழியில் உழைத்து சம்பாதியுங்கள். அதே வேளையில் எவ்வளவு உயரமாய் பொருளாதாரத்தில் வளர விரும்புகிறீர்களோ அவ்வளவு நாட்கள் எடுக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள். எனவே பனையைப்போல படிப்படியாக அதே வேளையில் உறுதியாக வளருங்கள் (சங்.92:12).

**வருமானத்தை ஞானத்தோடு சேமிப்போம்**

மக்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கம் படிப்படியாக குறைந்துகொண்டு வருகிறது. கிறிஸ்தவர்களில் அநேகர் தேவன் வருமானத்தைத் தரும்போது ஞானமில்லாமல் செலவழித்துவிட்டு பின்பு கடனில் சிக்கித் தவிக்கிறார்கள். இன்றைய வருமானத்தை இன்றே செலவிட்டு விடாமல் எதிர்காலத் தேவைகளுக்காக எடுத்து வைப்பதே சேமிப்பாகும்.

வாகனம் மற்றும் வீடு பழுதுபார்த்தல், எதிர்பாராத மருத்துவ செலவுகள், திடீரென்று வேலையில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்க குறைந்தது மூன்று மாதம் அல்லது ஆறு மாத சம்பளத்தை சேமிப்பில் வைப்பது நல்லது. அத்தியாவசியத் தேவைகள், பிள்ளைகளின் மேற்படிப்பு மற்றும் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட சேமிப்பு அவசியமாகும். வயதான காலத்தில் சொந்தக்காலில் நிற்க இப்போழுதே சேமிக்க ஆரம்பியுங்கள்.

நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தை கற்றுக்கொள் (நீதி.6:6). கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து,

அறுப்புக் காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும் (நீதி.6:8;30:25) என்று சேமிப்பைக் குறித்து வேதம் நமக்கு போதிக்கிறது.

சேமிக்க சரியான திட்டமிடுதல் அவசியம். வரவைவிட செலவைக் குறைப்பதே சேமிப்பின் முதல்படியாகும். சம்பளம் கைக்கு வந்தவுடன் உங்கள் முதல் கனியை கர்த்தருக்குப் பிரித்து வைத்தவுடன், உங்கள் முதல் செலவு சேமிப்புக்காக பிரித்துவைப்பதாக இருக்க வேண்டும். வங்கியில் தொடர்வைப்பு நிதிமூலமாக சேமிக்கலாம். இடையிடையே விட்டுவிடாமல் தொடர்ச்சியாக சேமியுங்கள்.

இலக்கு வைத்து சேமிக்கத் துவங்குங்கள். அடுத்த மூன்று வருடத்தில் ஒரு வாகனம் வாங்க வேண்டும் என்ற இலக்கு வைத்து மாதந்தோறும் அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை சேமிக்கலாம். எடுத்தவுடன் பெரிய இலக்கு வைத்து அதை எட்டமுடியாமல் சோர்ந்து விடுவதைவிட, சிறிய அளவிலிருந்து துவங்குங்கள். உங்கள் மாதாந்திர செலவிலோ அல்லது வீட்டு விழாக்களிலோ நீங்கள் மிச்சம் எடுக்கும் தொகையை செலவிடாமல் அதையும் சேமிப்பில் வையுங்கள். எதிர்பாராமல் வருகின்ற போனஸ், அரியர்ஸ், பிறவெகுமதிகளையும் செலவிட்டாமல் சேமிப்பில் வைக்கப் பழகுங்கள்.

தேவன் தந்த ஆசீர்வாதங்களை உதறித்தள்ளிய ஏசா, பின்நாட்களில் என்னை ஆசீர்வதியும் என்று தன் தகப்பனிடம் மன்றாடியும் முழுமையான ஆசீர்வாதத்தைப் பெறவில்லை. எனவே தேவன் நல்ல வருமானத்தைத் தரும்போது இஷ்டம்போல செலவழித்துவிட்டு, வயதான நாட்களில் கஷ்டப்படுவதைவிட, உங்களுக்குப் பெலன் இருக்கும் இந்த நாளிலிருந்தே சிறுக சிறுக சேமித்து வாங்குங்கள். எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளுங்கள்.

- Rev. சாமுவேல் ஜெபராஜ்

---

## *8 Rules for Spiritual Growth*

Eight rules that promote good health in babies can be adapted and applied to a Christian's spiritual growth.

1. **Daily Food.** Take in the "pure milk of the word" through study and meditation (1 Pet. 2:2).
2. **Fresh Air.** Pray often or you will faint. Prayer is the oxygen of the soul (1 Thess. 5:17).
3. **Water.** We must be filled with the Holy Spirit (John 7:38, 39).
4. **Regular Exercise.** Put into practice what you learn in God's Word. Witness for Jesus (James 1:22).
5. **Adequate Rest.** Rely on God at all times in simple faith (Mark 6:31).
6. **Clean Surroundings.** Avoid evil company and whatever will weaken you spiritually (Eph. 5:11).
7. **Loving Care.** Be part of a church. Benefit from a pastor's teaching and Christian fellowship (Heb. 10:25).
8. **Periodic Check-ups.** Examine your spiritual health (1 Cor. 11:31).



# ஆசீர்வாதமான அன்னையர்கள்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்விதழில், தாய்மார்களை நாம் எப்படி நடத்த வேண்டும் என்றும், பிள்ளை வளர்ப்பில், தாய்மார்களின் பொறுப்பைக் குறித்தும் பார்ப்போம். தாயை கனப்படுத்துவதைக் குறித்து வேதத்தில் பல இடங்களில் பார்க்கிறோம். தகப்பனையும், தாயையும் கனப்படுத்த வேண்டுமென்ற கட்டளையையும் அதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்களையும், எபே.6:1-ல், வாக்குத்தத்தமுள்ள கட்டளையாக நாம் காண்கிறோம். நன்மை உண்டாயிருக்கவும், வாழ்நாள் நீடித்திருக்கவும், தகப்பனோடு சேர்த்து தாயையும் நாம் கனப்படுத்தவும், பயந்திருக்கவும் வேண்டியவர்களாக இருக்கிறோம். தாயின் போதகத்தை தள்ளக்கூடாது. தாயை அசட்டை செய்யக்கூடாது, சபிக்கக்கூடாது, நிந்திக்கக்கூடாது என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (மத்.15:4; மாற்கு 7:10; லேவி.19:3; நீதி.23:22). நவீன கால பிள்ளைகளுக்கு இவைகளை வலியுறுத்திச் சொல்வது அவசியமாயிருக்கிறது. பிள்ளைகளே, உங்கள் தாயாரை நன்கு விசாரித்து கவனித்துக் கொள்ளுங்கள். விசேஷித்த தினங்களிலாகிலும், வாழ்த்துக்களைத் தெரிவித்து, முடிந்தால் வெகுமதிகளை வாங்கிக்கொடுத்து அவர்களை சந்தோஷப்படுத்துங்கள்.

### தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம்

இப்போது தாய்மார்களுக்குரிய கடமைகளைக் காண்போம். தாய்மார்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாயிருக்கிறார்கள். தேவன் தாம் நமக்குப் பிள்ளைகளைக் கொடுக்கிறார். நாம் விரும்பினாலும் நம் தாயையோ, பிள்ளைகளையோ மாற்ற முடியாது. ஆகவே மிகுந்த கவனத்துடன் நம்மிடம் தேவன் ஒப்படைத்துள்ள பிள்ளைகளை வளர்ப்பதும், உருவாக்குவதும் நம்மேல் விழுந்த கடமையாக இருக்கின்றது. தாயானவள் தன் பிள்ளைகளிடம் அன்பு செலுத்தி வளர்க்க வேண்டும். எல்லா நேரங்களிலும் கண்டித்துக் கொண்டே இருக்கக்கூடாது. அவர்களுடன் நேரம் (quality time) செலவழிக்க வேண்டும். அவர்களுடன் அமர்ந்து அவர்கள் பிரச்சனையைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும். நண்பர்களைப் போல தங்களுடைய எல்லா காரியங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி உறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். நியாயமான அவர்களின் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும்.

நல் ஆலோசனைகளை கொடுக்க வேண்டும். ரெபெக்காளைப் போல ஏமாற்ற ஆலோசனைக் கொடுக்கக்கூடாது. அதினால், சகோதரர்களுக்குள்ளே விரோதம் உண்டாயிற்று. விளைவு, யாக்கோபு வீட்டை விட்டே ஓட வேண்டிய நிலை வந்தது. ஏரோதியாள் தன் குமாரத்திக்கு தீய ஆலோசனை தந்து, தீர்க்கதரிசியின் தலையைக் கேட்கச் சொல்லுகிறாள். அதினால் யோவான் ஸ்நானகனின் தலை துண்டிக்கப்பட்டது. அத்தாலியாள், தன் மகன் துன்மார்க்கமாய் நடக்க அவனுக்கு ஆலோசனைக்காரியாயிருந்தாள் என்று (2நாளா.22:3-ல்) வாசிக்கிறோம். நாம் நம் பிள்ளைகளுக்கு வேதவசன அடிப்படையில் நல்ஆலோசனை தருபவர்களாக இருக்க வேண்டும். அதை அவர்கள் முதிர்வயது வரைக்கும் விடாதிருப்பார்கள். தாயானவள் தேற்றுகிறவளாகவும் இருக்க வேண்டும்.

## முன்மாதிரியானவள்

பேச்சிலும், உறவிலும், விசுவாசத்திலும், ஜெபத்திலும், தாயானவள் முன்னுதாரணமாய் இருக்க வேண்டும். பெரியவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் எப்படி மரியாதையாய், பணிவாய் பேசவேண்டும் என்பதை பிள்ளைகள் நம்மைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும்படி நம் பேச்சு இருக்க வேண்டும். உறவுகளை எப்படி பேணி காத்துக் கொள்ளவேண்டும் என்றும் மதிக்க வேண்டும் என்றும் தாய்மார்களாகிய நாம் நம் வாழ்க்கையின் மூலம் எடுத்துக் காட்ட வேண்டும்.

தீமோத்தேயுவின் தாயை போலவும்,பாட்டியைப் போலவும் நமக்குள் இருக்கும் விசுவாசத்தை நம் பிள்ளைகளுக்குள் கடத்த வேண்டும். யோவான் ஸ்நானன், ஆவியிலே பலங்கொண்டு என்று லூக்கா 1:80-ல் வாசிக்கிறோம். பிள்ளை வளர்ந்து ஆவியிலே பெலன் கொண்டு என்று இயேசுவானவரைப் பற்றி லூக்கா 2:40-ல் வாசிக்கிறோம். நம் பிள்ளைகளுக்கு சரீரப் பிரகாரமான ஆகாரத்தைத் தந்து ஆரோக்கியமாக வளர்ப்பதைப் போலவே, அவர்கள் ஆவியில் பெலன் கொள்ளும்படி ஜெபத்திலும் வேதவாசிப்பிலும் அவர்களைப் பழக்குவிக்க வேண்டும். தனிப்பட்ட விதத்ததில் வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் கற்றுக் கொடுங்கள். சிறு பிள்ளைகளானால், படங்களோடு கூடிய சிறுவர் வேதாகமத்தை (Children's Bible) வாங்கிக்கொடுத்து அவர்கள் உற்சாகமாய் அதை வாசிக்க வகை செய்யுங்கள். குடும்ப ஜெபத்திலும் பிள்ளைகளை கண்டிப்பாக உட்கார வையுங்கள். பாடல்களைப் பாடி தேவனை ஆராதிக்க ஊக்குவியுங்கள். வேத வசனத்தை வாசிக்கவும், அதிலிருந்து தேவன் அவர்களோடு பேசின வசனத்தை அல்லது அவர்கள் கற்றுக்கொண்ட புதிய காரியத்தை அல்லது அவர்களுக்கு உற்சாகமளித்த, ஊக்குவித்த, பிரியமான வசனத்தைப் பகிர்ந்து கொள்ளவும் சொல்லுங்கள். எங்கள் குடும்பத்தில் இப்படி செய்ததினால், எங்கள் பிள்ளைகள் நன்கு வசனத்தைப் பகுத்து போதிக்கிறவர்களாக இருக்கிறார்கள். உபாகமம் 6:7,8-ன் படி கர்த்தருடைய கட்டளைகள் யாவையும் கருத்தாய் அவர்களுக்கு போதிக்க வேண்டும். போதிக்கும் நேரம் என்று ஒன்றிராமல், நடக்கும்போதும், உட்காரும்போதும், படுக்கும்போதும் சாதாரணமாய், எளிமையாய் போதியுங்கள். இப்படி தேவன் பேரில் உள்ள அவர்கள் விசுவாசம் பெருகும்படி செய்யுங்கள். அதற்கு நீங்களே முன்மாதிரியாக வாழ்ந்தும் காண்பியுங்கள்.

ரெபெக்காள், அன்னாள் போன்று பிள்ளைகளைக் குறித்து கர்த்தரிடத்தில் விசாரிக்கிறவர்களாகவும், பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறவர்களாகவும், துதிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். நம் ஜெப வாழ்க்கை பிள்ளைகளுக்கு மாதிரியாயிருக்க வேண்டும். இக்கட்டான சூழ்நிலை வரும்போது முதலில் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும் என்பதை அவர்கள் நம்மைப் பார்த்து கற்றுக்கொள்ள வேண்டும்.

## மோசேயின் தாய், யோகெபேத்

பிறக்கும் ஆண்பிள்ளைகளை எல்லாம் நதியில் போட்டுவிட வேண்டும் பார்வோன் தன் ஜனங்கள் எல்லோருக்கும் கட்டளையிட்டான் (யாத்.1:20) என்று வாசிக்கிறோம். இந்த தாய், தனக்குப் பிறந்த ஆண் குழந்தை அழகுள்ளது என்று கண்டு மூன்று மாதமளவும் அதை ஒளித்து வைத்தாள். இவள் தன் பிள்ளையைக் குறித்து தரிசனம் உடையவளாய் இருந்தாள். பிள்ளையின் முகத்தில் உள்ள தெய்வீக அழகைக் கண்டாள். நாமும் நம் பிள்ளைகளைக் குறித்த தேவதிட்டம் என்ன என்பதை அறிந்தவர்களாயிருக்க வேண்டும். இதுவரை அறியாமல் இருந்தால்

ஜெபித்து அவர்களுக்குரிய வாக்குத்தத்தத்தை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். பின்பு அவள் ஒரு நாணற்பெட்டியை எடுத்து அதற்கு பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். நைல் நதியில் முதலைகள் அதிகம் இருப்பதால் குழந்தைக்கு எந்த பாதிப்பும் வராமலிருக்கவும், தண்ணீர் உள்ளே புகாமலிருக்கவும் தக்கதாக ஞானமாய் பிசினையும் கீலையும் பூசுகிறாள். கீல், முதலைகளுக்கு எதிரி. பிள்ளையின் தமக்கையை சரியாய் பேசும்படி கற்றுக்கொடுத்து அங்கே என்ன சம்பவிக்கும் என்பதை பார்க்க நிறுத்துகிறாள். பார்வோனின் குமாரத்தியினால் எடுத்து வளர்க்கப்படும் தன் குழந்தைக்கு தானே வளர்ப்புத் தாயாகி அதற்கு சம்பளமும் பெற்றுக் கொள்கிறாள். என்னே ஒரு தெளிவான தரிசனம்! மோசே தன்னிடம் வளர்ந்த அந்த நான்கு வருடங்களுக்குள் தேவனைக் குறித்து நன்கு போதித்து இருக்கின்றாள். அதினால் தான் மோசே பெரியவனானபோது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து... தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டான் (எபி.11:25). தன் மகள் மிரியாமையும், மூத்த மகனாகிய ஆரோனையும் தலைவர்களாக உருவாக்குகிறாள். ஆரோன், தன் இளைய சகோதரன் மோசேக்கு வாயாக இருந்து, அவர்கள் இருவரும் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுப்பதற்கான கருவிகளாக மாறுகின்றனர். மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன கையிலே தம்புரை எடுத்துக்கொண்டு பாடினாள் என்று பார்க்கிறோம் (யாத்.15:20). நல்ல ஒரு தீர்க்கதரிசியாகவும், ஆராதனை வீரராகவும் அவள் உருவாக்கப்பட்டிருக்கிறாள். தன் மூன்று பிள்ளைகளையும் குறித்த தேவ திட்டத்தை அறிந்து, அதன்படி அவர்களை இத்தனை நேர்த்தியாக வளர்த்திருக்கும் யோகெபேத், நம் எல்லாருக்கும் ஒரு முன்மாதிரியான தாயாக திகழ்கிறாள்.

### மரியாள்

இயேசுவின் தாயாகிய மரியாள், மேல் வீட்டறையில் சீஷர்களோடு காத்திருந்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள் (அப்.1:1). மாற்குவின் தாயாகிய மரியாள் தன் வீட்டை ஜெப வீடாக கொடுத்ததின் நிமித்தம், சிறைச்சாலையிலிருந்த பேதுரு அதிசயமாக மீட்கப்பட்டார் (அப்.12 :12).

தாய்மார்களாகிய நாம் வேதத்தில் உள்ள பரிசுத்தவாட்டிகளாகிய தாய்மார்களை முன்மாதிரிகளாக வைத்து நம் பிள்ளைகளை கர்த்தர் என்ன நோக்கத்தோடு நமக்கு கொடுத்தாரோ, அந்த நோக்கத்தை அறிந்து, ஜெபித்து அதற்கேற்றாற்போல் வளர்க்க தேவன் நமக்கு கிருபை அருள்வாராக!

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# மரித்தோருக்கு ஞானஸ்நானம்!

## மோர்மோனிசத்தின் கள்ளப் போதனை


**Rev.R.மதன்ராஜ்**

ஆசிரியர், மெட்ராஸ் ஏ.ஜி. வேதாகமக் கல்லூரி

Contributing Editor, Paripoorana Jeevan


பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு அனைவருக்கும் வணக்கம்.

மரித்தோரின் சார்பில் ஞானஸ்நானம் எடுக்கும் வழக்கம், மோர்மோனிசம் அல்லது பிற்கால பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படும் உபதேசத்தில் முக்கியமான ஒரு செய்கையாய் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. இந்த உபதேசத்தை கி.பி. 1820 ஆம் ஆண்டு ஜோசப் ஸ்மித் என்பவர் தோற்றுவித்தார். பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் இவருடைய தரிசனத்தில் தோன்றி இந்த திருச்சபையை தோற்றுவிக்கச் சொன்னதாக இவர் அறிவிக்கிறார். மேலும் மோரோனி (Moroni) என்ற தூதன் இவருடைய தரிசனத்தில் தோன்றி, அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தின் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காண்பித்து, அங்கே சில தங்க பட்டயங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிவித்து, பழைய எகிப்திய எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கும் அந்த பட்டயங்களை மொழிபெயர்க்கும்படிக்கும் அறிவித்ததாகவும் தெரிவிக்கிறார். அவர் மொழிபெயர்த்த அந்த பட்டயங்களை, "மோர்மோனியர்களின் புத்தகம்" (Book of Mormon) என்று தலைப்பிட்டு, இன்றும் அதை வேதத்திற்கு அப்பாற்பட்ட வெளிப்பாடாய் அவர்கள் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்துவின் ஆளத்துவத்தையும் தெய்வீகத் தன்மையையும் வேத சத்தியத்திற்கு புறப்பான வழியில் சித்தரிக்கும் இந்த மோர்மோனியர்களின் உபதேசம் பெருகிவரும் கள்ள உபதேசங்களில் முக்கியமான ஒன்றாய் கருதப்படுகிறது. இந்த போதனையின் அனைத்து உபதேசங்களையும் இந்த கட்டுரையில் நாம் ஆராயப்போவதில்லை. எனினும், மரித்தோருக்காய் ஞானஸ்நானம் எடுக்கும் வழக்கம் இவர்கள் கடைபிடிக்கும் முக்கியமான செய்கைகளில் ஒன்றாகும். ஜோசப் ஸ்மித், இந்த மரித்தோர் ஞானஸ்நான முறையை 1836ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். இந்த மரித்தோருக்கு ஞானஸ்நானம் எடுக்கும் செய்கையானது, "டெம்பிள்ஸ்" (Temples) என்று விசேஷ அந்தஸ்து பெற்ற இவர்களுடைய பிரத்யேகமான திருச்சபைகளில் மட்டுமே இரகசியமான வழிகளில் இன்றும் அரங்கேற்றப்பட்டு வருகிறது. மரித்தோரின் சார்பில் ஞானஸ்நானம் எடுக்கும் இவர்களின் இந்த செய்கை வேதத்தின் பார்வையில் சரியா என்பதை மட்டுமே இந்த கட்டுரை விவாதிக்கிறது.

ஒரு நபர் இயேசுவை அறியாமல் மரித்துவிட்டால், அவர் மரித்தபின்பு அவருடைய உறவினர்களில் யாரோ ஒருவர் அவருடைய சார்பில் ஞானஸ்நானம் எடுத்தால், மரித்த அந்த ஆத்துமா பரலோகத்திற்குள் பிரவேசித்துவிடும் என்று இவர்கள் நம்புகின்றனர். ஆவி உலகத்தில், சுவிசேஷத்தை அறிவிக்கும் இவர்களுடைய மிஷனரிகள் இருப்பதாக இவர்கள் நம்புகின்றனர். மரித்தோரின் சார்பில் அவர்களுடைய உறவினர்களில் வேறொருவர் ஞானஸ்நானம் எடுக்கும்போது, ஆவி உலகத்தில் செயல்பட்டு வரும் இவர்களுடைய மரித்த மிஷனரி பரிசுத்தவான்கள், அந்த குறிப்பிட்ட நபருக்கு சுவிசேஷத்தை அறிவித்து, அவர்களை பாதாள உலகத்திலிருந்து பரலோகத்திற்கு கூட்டிச் செல்லுவார்கள் என்று இவர்கள் தங்கள் போதனைகளை வடிவமைத்துள்ளனர். அதாவது, இம்மையில் இயேசுவை அறியாமல் மரித்தவர்களுக்கு மறுமையில் ஒரு வாய்ப்பு இருப்பதாக இவர்கள் உறுதியாய் நம்புகின்றனர்.

இவர்களின் இந்த போதனை சரியா அல்லது தவறா என்று பரிசீலிப்பதற்கு முன்பு, இவர்கள் ஏன் இந்த நம்பிக்கையை தத்தெடுத்தார்கள் என்பதை தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்?. சுவிசேஷத்தை ஒருமுறைக் கூட கேள்விப்படாதவர்கள் மரித்துவிட்டார்கள் என்றால், அவர்களை நித்திய நரகத்திற்கு அனுப்பும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு எந்த விதத்தில் நியாயமான தீர்ப்பாய் இருக்கமுடியும் என்று இவர்கள் கேள்வியெழுப்புகின்றனர். அதுபோன்ற நபர்களுக்கு மறுமையில் கிடைக்கும் வாய்ப்பாக இந்த மரித்தோர் ஞானஸ்நானத்தை இவர்கள் இன்றும் கடைபிடிப்பதாக தங்களின் போதனையை நியாயப்படுத்துகின்றனர்.

இவர்கள் இந்த உபதேசத்திற்கு 1 கொரி.15:29-ல் இடம்பெற்றுள்ள பவுலின் வார்த்தைகளை உறுதியான ஆதாரமாய் மேற்கோள் காண்பிக்கின்றனர்.

''மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?" (1 கொரி.15:29).

மேற்கண்ட இந்த வாக்கியத்தின் அடிப்படையில் பவுல் அப்போஸ்தலர் மரித்தோர் ஞானஸ்நானத்தை ஆதரிக்கிறார் என்று இவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் பவுல் இந்த வாக்கியத்தை எந்த சூழ்நிலையில் பேசுகிறார் என்பதை தெரிந்துகொண்டால், அவர் மரித்தோர் ஞானஸ்நானத்தை ஆதரிக்கிறாரா என்பதை தெரிந்துகொள்ள முடியும். அதற்கு, இந்த வேதப்பகுதியை அதின் சரியான சரித்திர மற்றும் இலக்கிய சூழலில் அர்த்தம் காண்பது அவசியம்.

1 கொரி.15ஆம் அதிகாரம் முழுமையையும் வாசித்து பாருங்கள். அதில் பவுல் உயிர்த்தெழுதலைக் குறித்து போதிக்கிறார் என்பதை வாசித்த மாத்திரத்தில் எவரும் அறிந்துகொள்ளக்கூடும். மரித்துப்போன பரிசுத்தவான்கள் மீண்டும் உயிர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கையில்லாத சில விசுவாசிகள் கொரிந்திய திருச்சபையில் இருந்தனர். அவர்களின் தவறான புரிதலை மாற்றுவதற்கு பவுல் இங்ஙனம் பிரயாசப்படுகிறார். கிறிஸ்தவர்களின் உயிர்த்தெழுதலை நம்பாதவர்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் நம்ப முடியாது; மரித்துப்போன கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுவது சாத்தியமில்லை என்றால், கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை; கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால், சுவிசேஷம் முற்றிலும் பொய்யாய் போயிருக்கும்; சுவிசேஷம் பொய்யென்றால், பவுலின் போதனைகள் அனைத்தும் பொய்யாக போய்விடும். ஆகையினால், கொரிந்து சபையின் இந்த அஸ்திபார பிரச்சனைக்கு உடனடியாய் தீர்வு காணவேண்டிய அவசியத்திற்கு பவுல் தள்ளப்படுகிறார் 1 கொரிந்தியர் நிருபம் எழுதப்பட்ட முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

பவுல் இங்ஙனம் மரித்தோருக்காக ஞானஸ்நானம் எடுக்கும் வழக்கத்தை ஆதரித்து பேசவில்லை; மாறாக, கொரிந்திய மக்கள் ஒரு சிலரிடம் ஏற்கெனவே வழக்கத்திலிருந்த இந்த செய்கையை தன் போதனைக்கு ஆதரவாகவும், உயிர்த்தெழுதலை நம்பாத கொரிந்திய விசுவாசிகளின் எண்ணங்களுக்கு முரணாகவும் முன்வைக்க விரும்புகிறார். மரித்தோரின் சார்பில் ஞானஸ்நானம் எடுக்கும் கூட்டத்தினரின் செய்கையானது வேதாகமத்தின் பார்வையில் அங்கீகரிக்கப்படாத தவறான செய்கை என்று பவுல் நம்பினாலும், உயிர்த்தெழுதலை நம்பாதது அதை விட மோசமான ஒன்று என்று இங்ஙனம் நிரூபிக்க விரும்புகிறார். எனவே, வேதம் அனுமதிக்காத இந்த மரித்தோர் ஞானஸ்நானத்தை செய்கிறவர்கள் கூட மரணத்திற்கு பின்னான உயிர்த்தெழுதலை நம்புவதினால் தான், இந்த சடங்காச்சாரத்தை கடைபிடிக்கிறார்கள் அவ்வாறு கடைபிடித்தாவது, மரித்துப்போன தங்களுக்கு பிரியமானவர்களை பரலோகம் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள்

பிரயாசப்படுகிறார்கள். அவர்கள் செய்வது மதியீனமான ஒரு செய்கை என்பது பவுலுக்கு நன்கு தெரிந்திருந்தும், அவர்களை மேற்கோள் காண்பித்து, மரணத்திற்கு பின்னாக உயிர்த்தெழுதல் இல்லை என்று நம்பும் கொரிந்திய விசுவாசிகளின் மதியீனமான நம்பிக்கை எந்த அளவிற்கு மோசமானது என்பதை வலியுறுத்திக் காண்பிக்கிறார்.

**மரித்தோர் ஞானஸ்நானத்தை பவுல் ஆதரித்து பேசவில்லை என்பதற்கான ஆதாரங்கள்:**

1. பவுல் தன்னுடைய எந்த நிருபத்திலும் இந்த மரித்தோர் ஞானஸ்நானத்தைக் குறித்தோ அல்லது அதை ஆதரித்தோ பேசவில்லை. 1 கொரி.15 லும் பவுல் அதை ஆதரிக்கவில்லை; மாறாக, மரணத்திற்கு பின்னான உயிர்த்தெழுதலைக் குறித்தே இங்ஙனம் பேசுகிறார் என்பது புலனாகிறது.
2. பவுல் இந்த செய்கையை அறிவிக்கும்போது, அதை தன்னுடைய வழக்கமான வார்த்தைகளில் (நாங்கள், எங்கள்) அடையாளப்படுத்தாமல், தன்னுடைய போதனைக்கு அப்பாற்பட்ட வேறொரு கூட்டமாகவே (“மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள்'') அவர்களை அடையாளப்படுத்திக் காண்பிக்கிறார். இந்த பயன்பாடுகள் கிரேக்கத்தில் மிகவும் தெளிவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இங்ஙனம் மரித்தோர் ஞானஸ்நானத்தை ஆதரிப்பது பவுலின் நோக்கம் அல்ல. மரித்தோர் ஞானஸ்நானமும் தவறு, மரணத்திற்கு பின்பாக உயிர்த்தெழுதல் இல்லை என்று நம்புவது அதைவிட பெரிய தவறு என்பதை வலியுறுத்துவதே பவுலின் நோக்கம்.

ஒருவரின் சார்பில் இன்னொருவர் ஞானஸ்நானம் எடுப்பது நம்முடைய இறையியல் அஸ்திபாரத்தையே அசைப்பதாக இருக்கிறது. மேலும் ஞானஸ்நானம் என்பது மனந்திரும்புதலின் சடங்காச்சார ரீதியான பிரதிபலிப்பே தவிர, பரலோகம் செல்வதற்கான உறுதியான அங்கீகாரம் அல்ல. அவரவருடைய பாவத்தை அவரவரே அறிக்கையிட்டு மனந்திரும்பாத பட்சத்தில், இரட்சிப்பு சாத்தியமில்லை என்று வேதாகமம் எங்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதை புதிய ஏற்பாடு மட்டுமல்லாது, பழைய ஏற்பாடும் தீவிரமாய் ஆதரிக்கிறது. உதாரணத்திற்கு, எசேக்கியேல் 14:14இல் “நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவருடைய நீதியினிமித்தம் மற்றவரை பாதுகாப்பது சாத்தியமில்லை என்பதை வேதாகமம் ஆணித்தரமாய் சாட்சியிடுகிறது.

ஒருவேளை மரித்தோருக்காய் ஞானஸ்நானம் எடுக்கலாம் என்பதை வேதம் அங்கீகரித்திருக்குமானால், சுவிசேஷத்தின் வேகமும் தீவிரமும் தடைபடும். அது தேவனுடைய இராஜ்யத்தின் நோக்கத்திற்கு முற்றிலும் முரண்பாடாய் அமையக்கூடும். ஒருவர் ஜீவனோடு இருக்கும்போதே அவர்களை இரட்சிப்புக்கு நேராய் வழிநடத்தவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அதுவே நமக்கிருக்கும் அதிகபட்சமான அவகாசம். அவர்களின் மரணத்திற்கு பின்பாக, அவர்களுக்கு பதிலாக நாம் ஞானஸ்நானம் எடுத்து அவர்களை பரலோகம் கொண்டு செல்லும் குறுக்கு வழிக்கு வேதாகமம் ஒருபோதும் ஆதரவு தெரிவிக்கவில்லை. மோர்மோனிசத்தின் இந்த போதனை முற்றிலும் தவறானது; வேதத்திற்கு புறம்பானது. இந்த செய்கை இவர்களை கள்ள உபதேசிகளாகவே அடையாளப்படுத்துகிறது. வளர்ந்து வரும் இந்த கள்ள போதனைக்கு திருச்சபை எச்சரிக்கையாயிருக்க வேண்டியது மிகவும் அவசியம்.



# வட கிழக்கு மிஷன் இலாக்கா

## Rev. A. எட்வின் பிரபாகர்

வட கிழக்கு மிஷன் இலாக்கா இயக்குநர்

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்கள் அனைவருக்கும் மிஷன் இலாக்கா சார்பில் அன்பின் வாழ்த்துக்கள். தேவ கிருபையினால் வட மாநில ஊழியங்களை, மிஷனரி குடும்பங்களை தேவன் ஆசீர்வதித்து பயன்படுத்தி வருகிறார். மிஷனரிகளுக்காக, மிஷன் ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். ஜெபத்தோடு தியாகம் செய்து கொடுத்து உதவி செய்யுங்கள். வடமாநிலங்களுக்கு மிஷனரிகளையும் அனுப்பித் தாருங்கள். தாங்களும் வந்து ஜெபநடை ஊழியம் செய்ய வாருங்கள் என்று அன்போடு அழைக்கிறோம். மிஷன் பணிக்காக தாங்கள் பாரப்பட ஒரு சில வேத வசனங்களை கீழ்காணும் செய்தி மூலம் தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வாசித்து, பாரம் கொண்டு, அர்ப்பணத்தோடு, வைராக்கியத்தோடு, எழுந்துசெயல்பட வேண்டிக்கேட்கிறேன்.

**காலம் சமீபமாயிருக்கிறது : வெளி 1:3**

சத்திய வேதம் எழுதப்பட்ட காலங்களிலேயே காலம் சமீபமாயிருக்கிறது என்று நம்மை சுட்டிக்காட்டுகிறது. இன்று 2025 க்கு வந்துவிட்டோம். எத்தனை அதிகமாய் நாம் அவரை சந்திக்க காலம் சமீபமாயிருக்கிறது. வருகைக்கு முன்பு இந்திய தேசம் முழுவதையும் சுவிசேஷ மயமாக்க காலத்தை உணர்ந்து செயல்பட கர்த்தர் நமக்கு கிருபை தருவாராக.

**1. இது இரட்சண்ய காலம் :**

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது 2 கொரி.6:2 இல் இது இரட்சணிய நாள் அல்லது காலம் என்பதை சுட்டிக்காட்டுகிறார். இந்தியாவின் 144 கோடி ஜனங்களின் ஆத்தும இரட்சிப்பை இயேசு கிறிஸ்துவின் இருதய பாரம் யார் ஒருவர் அதை உணர்ந்து கிறிஸ்துவை சுவிசேஷமாய் அறிவிக்க எழுந்து செயல்படுகிறார்களோ அவர்கள் மூலம் இரட்சண்ய நாளில் உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லி இருக்கிறவர் இந்தியாவின் ஜனங்களை இரட்சித்து தர உண்மையுள்ளவராயிருக்கிறார்.

ஆதி அப்போஸ்தல காலங்களில் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுந்து பிரசங்கிக்கும்போது அப்.2:41 இல் 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். அப்.4:4-ல் 5000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். அப்.5:14 இல் திரளான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இந்த கிருபையின் காலம் இரட்சண்ய காலம். தனி விசுவாச நபர் ஊழியங்கள் சபை மற்றும் தேசம் முழுவதும் நாம் ஊடுருவிச் சென்று சுவிசேஷத்தை அறிவித்தால் இரட்சண்ய காலத்தில் முழு இந்திய ஜனங்களையும் இரட்சிக்க இயேசு வல்லமை உள்ளவராய் இருக்கிறார். வடமாநிலங்களுக்கு வருவீர்களா?, சுவிசேஷத்தை வந்து அறிவிப்பீர்களா? இது இரட்சணிய காலம். உங்கள் மூலம் இந்திய தேசத்தை சந்திக்க இயேசு உண்மையுள்ளவராயிருக்கிறார். செயல்படுவோம்! மாற்கு 16:20 இன் படி நம்மோடு இருந்து கிரியை செய்து வசனத்தை அடையாளங்களினாலே உறுதிப்படுத்தி இந்திய மக்களின் முழு இரட்சிப்பை பார்க்க தேவன் உதவி செய்வார்.

**2. நற்செய்தி சொல்லும் காலம் :**

2 இராஜா.7:9 இல் இஸ்ரவேலில் ஒலிமுக வாசலில் இருந்த நான்கு குஷ்டரோகிகள் ஆசீர்வாதத்தை சீரியரின் பாளயத்தில் பார்த்தபோது இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள் இல்லாவிடில் குற்றம் நம்மேல் சுமரும் என்று உணர்ந்தது போல கிறிஸ்துவின் அன்பை கண்ட அனைவரும் இந்நாள் இந்தியாவுக்கு நற்செய்தி சொல்லும் காலம் என்று உணர்ந்து இயேசுவை நற்செய்தியாய் அறிவிக்க ஆவியானவர் நம்மை வைராக்கியமாக்குவாராக. ஆண்டவர் இயேசுவும் நமக்கு காண்பித்தபடி யோவான் 1:14 இல் பகற்காலம் இருக்கும் மட்டும் என்னை அனுப்பினவரின் கிரியை செய்ய வேண்டும் என்று, நமக்காக ஜீவன் கொடுக்கும் வரை கிரியை செய்து கொண்டே இருந்தார். நாமும் தளர்ந்துபோகாது பாரம் கொண்டு தேசம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் நம்மை பலப்படுத்துவாராக.

பிலிப்புவை கந்தாகே மந்திரிக்கு சுவிசேஷத்தை அறிவிக்கப் பயன்படுத்தினார் (அப்.8:27;36;38;39). அப்போஸ்தலனாகிய பேதுருவை கொர்நெலியுவுக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பயன்படுத்தினார் (அப்.10). அப்போஸ்தலனாகிய பவுலை கொண்டு முதியோருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் பயன்படுத்தினார் (அப்.16), இந்த காலம் நற்செய்தி அறிவிக்கும் காலம் என்பதை உணர்ந்து ஆண்டவர் இயேசுவை நேசித்து ஆழமாய் அர்ப்பணித்து எழுத்து செயல்பட கர்த்தர் இயேசு நமக்கு உதவிசெய்வாராக.

**3. பின்மாரி ஊற்றப்படும் காலம்:**

முன்மாரி பெந்தேகொஸ்தே நாளில் ஊற்றப்பட்டது போல தேசங்கள், ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கு ஒரு பின்மாரி ஊற்றப்படும் காலத்தை தேவன் வைத்திருப்பதை சகரியா 10:1 சுட்டிக் காட்டுகிறது. அதற்காக நாம் இத்தனை காலம் பின்மாரி மழைக்காக வேண்டுதல் செய்திருக்கிறோம். இனி பின்மாரியின் எழுப்புதலின் மழையை இந்தியாவில் பார்க்கப் போகிறோம்.

அப்.2:4 இல் 120 பேர் மேல் ஆவியானவர் ஊற்றப்பட்டார். அப்.8:16,17 இல் சீஷர்கள் யார் யார் மேல் கைகளை வைத்தார்களோ அத்தனை பேர்களும் பரிசுத்த ஆவியை பெற்றார்கள். கடைசி காலத்தில் பின்மாரி ஊற்றப்படும்போது மாம்சமானயாவரையும் தேவன் ஆவியானவரால் நிரப்புவார். அக்காலத்தில் தான் நாம் வந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் ஆத்துமாக்களை இரட்சித்து அபிஷேகித்து வருகைக்கு ஆயத்தப்படுத்தும் காலம் இது.

அன்பானவர்களே வருகையின் காலம் சமீபித்திருப்பதினால் நாம் செய்ய வேண்டிய நற்செய்தி பணியை தேசம் முழுவதும் கிராமங்கள் பட்டணங்கள் எங்கும் சுற்றி திரிந்து கிறிஸ்துவை சுவிசேஷமாய் அறிவித்து ஆத்துமாக்களால் தேவ ராஜ்யத்தை நிரப்புவோமாக நாமும் கிறிஸ்துவின் நாளில் சந்தோஷமாய் அவருக்கு முன்பாக நிற்க நம்மையும் ஆயத்தப்படுத்துவோமாக. இக்காலத்தில் அவருக்காக நாம் பிரயோஜனமாய் இருக்க கர்த்தர் கிருபை தருவாராக. இந்தியா கிறிஸ்துவினுடையதாய் மறுரூபப்படுவதாக. ஆமென்!

**ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! ஜெபியுங்கள் :**

1. இந்திய தேசம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திக்கப்படுவதற்காக.
2. மிஷன் பணிகளுக்கு விரோதமான அந்தகார கிரியைகள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அழிக்கப்படும்படியாக.

3. நாம் தாங்குகிற 644 மிஷனரி குடும்பங்களின் பாதுகாப்பிற்காக.
4. மிஷனரிகள் வல்லமையாய் பயன்படுத்தப்பட.
5. 2030 ற்குள்ளாக புதிய 600 மிஷனரிகள் வடமாநிலங்களுக்கு அனுப்பப்பட.
6. ஒரு மிஷனரியின் மாதாந்திர உதவி மாதம் 5000 கொடுக்கிறவர்கள் புதிய 600 பேரை தேவன் எழுப்ப.
7. வட மாநிலங்களில் அனைத்து மண்டலங்களில் இருந்தும் வருடத்திற்கு ஒரு முறை ஜெபநடை மிஷன் பிரயாணங்கள் செல்ல.
8. அனைத்து மண்டலங்களிலும் வருடந்தோறும் மிஷன் கன்வென்ஷன்கள் நடந்த.
9. வட மாநிலங்களில் 3 லட்சம், 5 லட்சம், 10 லட்சம் கொடுத்து சிற்றாலங்களை கட்டி கொடுக்கிறவர்களை தேவன் எழுப்ப.
10. மண்டல மிஷன் பொறுப்பாளர்கள் மற்றும் பிரதேச மிஷன் பொறுப்பாளர்களோடு தேவன் இருந்து நமது மகிமைக்கேதுவாக கிரியை செய்ய.

---

## சபையைக் குறித்து எனது உறுதிமொழி

1. சபைக்கும் எனக்கும் உள்ள தொடர்புதான் தேவன் எனக்குத் தரும் ஆசீர்வாதம்.
2. நான் என் பிள்ளைகளுக்குத் தரும் சொத்து, அவர்களுக்கும் என் சபைக்கும் உள்ள தொடர்பு ஆகும்.
3. தேவன் என் மேல் அன்பாய் இருப்பதையும், நான் தேவன் மேல் அன்பாய் இருக்கிறேன் என்பதையும் நான் சபைக்குத் தவறாமல் வருவதன் மூலம் நிரூபிக்க முடியும்.
4. என்னில் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி காணப்படுகிறது என்பதை நான் சபையில் ஆராதிப்பதே நிரூபிக்கும்.
5. எனக்கு தேவன் மீது தாகம் இருக்கிறது என்பது, நான் சபையில் செய்யும் ஊழியம் மூலம் நிரூபிக்கப்படுகிறது.
6. பரிசுத்த ஜீவியத்துக்கு ஒரு ஆதாரம் சபை.
7. சாத்தான் என்னோடு அதிகமாய் போராடுவதன் பிரதான நோக்கம் என்னை சபையிலிருந்து பிரிப்பதே. அதைமீறி நான் சபையில் நாட்டப்படுவதே ஆசீர்வாதம்.
8. நான் சபையோடு ஐக்கியப்படுவதே தேவனின் பிரதான நோக்கம்.
9. இந்த உலகத்தின் பாடுகளை, நான் சபையில் வந்து ஆராதிப்பதால் பெறும் பெலத்தினாலே ஜெயிப்பேன்.
10. எந்த சூழ்நிலையிலும் நான் சபையை விட்டு விலகமாட்டேன்.
11. என் சுபாவங்களில் மாற்றம், தேவனுடைய சபைக்கு வந்து போவதினாலேயே ஆகும்.



## Rev.P.S.ராஜமணி

## அழைப்பும் அர்ப்பணிப்பும் கொண்ட வாழ்க்கை

**7.7.1939 - 22.4.2025**

பாஸ்டர். P.S.ராஜமணி 1939 ஆம் ஆண்டு தமிழகத்தின் தென்காசி அருகில் அச்சன்புதூர் அருகிலுள்ள அமைதியான நெடுவயல் என்ற கிராமத்தில் CSI குடும்பத்தில் பிறந்தார். தன் பெற்றோருக்கு பிறந்த ஆறு பிள்ளைகளில் இவர் ஐந்தாவதாக பிறந்தார். இவரது பெற்றோர் தீவிரமான விசுவாசத்துடன் வாழ்ந்தவர்கள். வீட்டில் கடுமையான ஆவிக்குரிய ஒழுக்கத்தைக் கடைபிடித்து, குடும்ப ஜெபம் மற்றும் திருச்சபைச் செயல்பாடுகளில் ஈடுபடுத்தித் தங்கள் பிள்ளைகளை வளர்த்தார்கள்.

கடையநல்லூரில் அரசு பள்ளியில் கல்வி பயின்ற இவர் பல சவால்களை எதிர்கொண்டு, தனது பள்ளிக்கல்வியை முடித்தார். இவருக்கு 18 வயதாக இருந்த 1957-ஆம் ஆண்டு, தென்காசி AG தொழிற்பயிற்சி பள்ளி மைதானத்தில் நடந்த சுவிசேஷக் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்டார். அந்நாட்களிலேயே தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்.

இதன் பின்னர் இவர் முழுநேர ஊழியத்திற்கு தேவனிடமிருந்து தெளிவான அழைப்பைப் பெற்றார். ஆனால், ஏற்கனவே பெந்தெகொஸ்தே ஊழியர்கள் அனுபவித்த கஷ்டங்களைக் கண்டுவந்த இவரது தந்தை அதற்கெதிராக இருந்தார். எனவே தந்தையின் விருப்பத்தை மதித்து, ராஜமணி அவர்கள் கோயம்புத்தூரில் உள்ள ஒரு தனியார் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து, பின்னர் அரசாங்க வேலையிலும் அமர்ந்தார்.

இந்தக்காலத்தில் தான், இவரது திருமணம் பாளையங்கோட்டையைச் சேர்ந்த வசந்தாவுடன் ஏற்பாடானது. 1963-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பிறகு ஒருவருடத்துக்குள், இவர் மீண்டும் தேவனின் அழைப்பை உணர்ந்தார். இந்த முறை, கணவன்-மனைவி இருவரும் தீவிரஜெபத்தில் தேவனுடைய வழிநடத்துதலை நாடினார்கள். அரசாங்க வேலையை ராஜினாமா செய்து விட்டு ஊழியத்தை செய்வதென்ற தீர்மானம் எடுத்தார்கள்.

தன் மனைவி மற்றும் முதல்பெண் குழந்தையை கணக்கபிள்ளை வலசையில் (தென்காசி அருகில்) விட்டுவிட்டு, இவர் தனது இறையியல் படிப்பைத் துவங்கினார். முதலில் மதுரையில் உள்ள AG தமிழ்நாடு வேதாகமக் கல்லூரியில் ஒருவருடமும், பின்னர் பெங்களூரில் உள்ள தெற்காசிய வேதாகமக் கல்லூரியில் (SABC) மூன்று ஆண்டுகளும் படித்தார். அச்சமயம் தொழிற்பயிற்சி பள்ளியில் தையல் ஆசிரியையாக பணியாற்றிய இவரது மனைவி, தனது மாதவருமானம் ரூ.100லிருந்து இவரது கல்விச் செலவுக்கென்று மாதம் ரூ.10 அனுப்பி வந்தார்.

படித்து முடித்தவுடன், இவரின் போதிக்கும் திறன் காரணமாக AG தமிழ்நாடு வேதாகமக் கல்லூரியில் ஆசிரியராகவும், Dean ஆகவும் பணியமர்த்தப்பட்டார். அதேசமயம், கல்லூரி சிற்றாலயத்தில் இயங்கிவந்த சபையின் போதகராகவும் நியமிக்கப்பட்டார்.

அப்போது இவருக்கு இருபிள்ளைகள்; மாதசம்பளம் ரூ.175 மட்டுமே. ஆனாலும், இவர் ஆனந்தத்துடனும், முழுமனதுடனும், தியாகத்துடனும் ஊழியம் செய்து வந்தார். ஜெபத்துடன்கூடிய பிரயாசத்தின் பலனாய் மதுரையில் முதல் AG சபையை நிறுவினார். சபைக்கென இடம்வாங்கி, கட்டிடம்கட்டி, 1976-ஆம் ஆண்டு டிசம்பரில் புதிய ஆலயக்கட்டிடம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதேவருடம், அவர் அமெரிக்கா சென்று

Missouri மாநிலத்திலுள்ள AG பைபிள் கல்லூரியில் இறையியல் முதுநிலை பட்டம் (M.A) பெற்று, 1978-ஆம் ஆண்டு இந்தியா திரும்பினார்.

திரும்பிய பிறகு, தேவன் இவருக்குப் புதியவாசலைத் திறந்தார். சபைப் பொறுப்பை மீண்டும் ஏற்பதற்குப் பதிலாக, தேவனின் புதிய அழைப்புக்குக் கீழ்படிந்து, புதியசபைகளை ஆரம்பிக்க அவருடைய வாழ்நாள் முழுவதும் சுவிசேஷ பணிக்கென தன்னை அர்ப்பணித்தார். வேதாகமக் கல்லூரியில் போதித்துக்கொண்டே AG ஸ்தாபனத்தில் பலநிலைகளில் தலைமைப் பொறுப்புகளிலும், சுவிசேஷகராகவும், கன்வென்ஷன் பிரசங்கியாகவும், குடும்ப முகாம்களை நடத்தியும், குறிப்பிடத்தகுந்த ஊழியங்களைக் கர்த்தருக்கென்று நிறைவேற்றினார். பல ஆண்டுகள் இவர் நடத்திய **''எக்ளிசியா''** என்ற பத்திரிக்கை, தமிழ் கிறிஸ்தவ உலகில் மிகப்பெரிய வரவேற்பைப்பெற்று, நல்லதாக்கத்தை ஏற்படுத்தியது. பல்வேறு தலைப்புகளில் 19 புத்தகங்களை தமிழில் எழுதியுள்ளார்.

இவருக்கு மூன்று பெண்பிள்ளைகள் உண்டு. ஹெப்சிபா (Rev. எபி ஜெயராஜ் மனைவி), லதாசோபியா (Rev.T.R.ஜான்வின்ஸ்லி மனைவி), டெய்ஸிகொலீன் (Prof.கிறிஸ்டோபர் சார்லஸ் மனைவி). இவரது பேரக்குழந்தைகள்: Ernest, Jeffrey, Lynetta, David, Sharon)

**பாஸ்டர். P.S.ராஜமணி அவர்கள் AG சபையில் வகித்த முக்கியமான பொறுப்புகள்**

**தேசியஅளவில்:(AGI)**

தேசிய இயக்குனர், அறுவடையின் பத்தாண்டுகள் 1991-2000

மிஷன் ஸ்டைரக்டர், இந்தியா AG: 2000 -2015

விஷன் 2020 டைரக்டர், இந்தியா AG: 2010 - 2020

**தென்னிந்திய அளவில்:(SIAG)**

ஜெனரல் சூப்பரின்டெண்டென்ட்: 2003-2011

அசிஸ்டண்ட் ஜெனரல் சூப்பரின்டெண்டென்ட்: 1991-2003

**மாநில அளவில் :(Tamil District)**

சூப்பரின்டெண்டென்ட்: 1998-2009

அசிஸ்டண்ட் சூப்பரின்டெண்டென்ட்: 1987-1997

பொருளாளர், 1986

எக்ஸிகியூட்டிவ் கமிட்டி உறுப்பினர்: 1974-1976, 1978-1985

ஆசிரியர், தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி 1969 - 1990

பாஸ்டர், முதல் AG சபை, மதுரை: 1969-1976

பாஸ்டர். ராஜமணி அவர்கள் 2025 ஏப்ரல் 22 அன்று தனது 85வது வயதில் தன் உலக ஓட்டத்தை முடித்து, மறுமைக்குள் பிரவேசித்தார். இவருடைய வாழ்க்கை, பரிசுத்தம், விசுவாசம், பூரண அர்ப்பணிப்பு, தேவ வைராக்கியம் போன்றவை நிரம்பிய ஓர் சரித்திரமாகும். இவர் நடத்திய சபைகள், பயிற்றுவித்த ஊழியர்கள் மற்றும் இவர் வழியாக ஆண்டவரை அனுபவித்த மக்களால் இவர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்

இவரது பிரசங்கங்கள், போதனைகள், வேதாகம சத்தியங்களால் நிரம்பியவை. அதே சமயம், அவை மக்களிடம் எளிமையாக சென்று சேரும் வகையில் நகைச்சுவையுடனும், கிருபையுடனும் இருந்தது. உலகெங்கிலும் உள்ள தேவப்பிள்ளைகளின் வாழ்விற்கு, இவரது வாழ்க்கையும், ஊழியங்களும் முன்மாதிரியாகவும், ஆசீர்வாதமானதாகவும் இருந்தது குறித்து கர்த்தருக்கு மகிமை செலுத்துகிறோம்!.

- பாஸ்டர். ஜான் வின்ஸ்லி

# ஜெபத்தில் காணப்பட வேண்டிய '4' எல்லாம்



''எந்தச் சமயத்திலும், சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்'' (எபே. 6:18).

இந்த வசனத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் வார்த்தை 'சகல' 'எல்லா' (All) என்பதாகும். இந்த ஒரு வசனத்தில் மட்டும் 4 வகையான 'எல்லா' (All) என்ற பொருள்படும் வார்த்தைகள் உள்ளது.

### 1. எல்லா நேரத்திலும் (ALWAYS)

உண்மையான விசுவாசி தொடர்ந்து எல்லா நேரத்திலும் ஜெப சிந்தனையோடு வாழ்கிறார். இதைத் தான் தெசலோனிக்கேயருக்கு எழுதும் நிருபத்தில் "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1தெச.5:17) என்று பவுல் எழுதுகிறார். ஆம் நாம் தேவனோடு உரையாடுதல் இடைவிடாமல் எப்போதும் இருக்கும் பழக்கமாய் இருக்க வேண்டும் (அப்.10:2;12:12). எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்று இயேசு கூறுகிறார் (லூக்கா 21:36).

### 2. எல்லாவித ஜெபத்திலும் (ALL PRAYER)

நம் வாழ்வே ஜெப வாழ்வாய் இருப்பதால், நம் ஜெபங்களும் பல வகைப்பட்டதாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவனின் ஜெபம் கிரமமாகவும், திட்டமிடப்பட்டதாகவும், குறிப்பானதாகவும் இருக்க வேண்டும். அவசர தேவைகளுக்கும் ஜெபிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள் சில துதிகள் நிறைந்ததும், ஆராதனையாகவும் மற்றும் பாவ அறிக்கை உள்ளதாகவும் இருக்கலாம். நாம் ஆவியோடு ஜெபிப்பதையும், உபவாசித்து ஜெபிப்பதையும், மன்றாடி ஜெபிப்பதையும், நன்றி செலுத்தி ஜெபிப்பதையும், பாவ அறிக்கை செய்து ஜெபிப்பதையும், போராடி ஜெபிப்பதையும், பயிற்சி செய்ய வேண்டும். இவற்றைத்தான் "எல்லாவித ஜெபத்தோடும்" என்று அப்.பவுல் குறிப்பிடுகிறார்.

### 3. எல்லாவித மன உறுதியோடும் (ALL PERSEVERANCE)

இது நாம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஜெபித்தல் என்பது இயல்பாக காணப்படுவதோ அல்லது எளிதான காரியமோ அல்ல. ஜெபிப்பதற்கு கடின உழைப்பும், விடாமுயற்சியும் தேவை. எல்லாவித மன உறுதியும் தேவை. நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்கள்? எதற்காக ஜெபிக்கிறீர்கள்? சோர்ந்துபோகாமல் ஜெபியுங்கள். நாம் இடைவிடாமல், விடா முயற்சியுடன் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்துள்ளார் (மத்தேயு 7:7; லூக்கா 18:1-8).

### 4. எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் (ALL THE SAINTS)

எல்லோருக்கும் நம் ஜெபம் தேவை. குறிப்பாக மற்ற விசுவாசிகளுக்காகவும், பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபித்தல் வேண்டும். தேவனுக்கு மிகப் பெரிதானதோ, அல்லது அற்பமானதோ எதுவும் கிடையாது. நாம் சில நேரங்களில் மட்டும், சிலருக்காக மட்டும், சில வகை ஜெபங்கள் மட்டும் செய்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்காகவும், எல்லோருக்காகவும், எல்லா நேரங்களிலும் நாம் ஜெபிக்கவேண்டுமென்று விரும்புகிறார்.



# உங்களுக்கான நேரம் இப்பொழுது துவங்குகிறது

## YOUR TIME STARTS NOW


**Rev.K. ராஜா**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்


ஒரு புதிய கல்வியாண்டிற்குள் (2025-2026) அடியெடுத்து வைத்திருக்கும் அன்பான மாணவ, மாணவிகளுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் மாணவர் ஊழியத்தின் சார்பாக அன்பின் வாழ்த்துக்கள்.

எந்த ஒரு காரியத்திலும் சாதனை செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் சரியாய் பயன்படுத்திக்கொள்ள வேண்டியவைகளில் ஒன்று காலம் அதாவது நேரம் என்று சொன்னால் மிகையாகாது. அப்படி இந்த கல்வியாண்டில், கடந்த ஆண்டில் சாதிக்க முடியாத இலக்கை சாதிக்க விரும்புகிறீர்களா? அதற்கான காரணத்தையும் வழியையும் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்கு உதவியாக சில ஆலோசனைகள்.

**1. உங்களுக்கு முன் இருக்கும் காலத்தைப் பாருங்கள் (WALK INTO THE FUTURE WITH VISION)**

- காலம் பொன் போன்றது. பொன் மனிதனுக்கு ஒரு பொக்கிஷம். அதுபோல, காலமாகிய பொக்கிஷம், ஒரு முழு கல்வியாண்டாக உங்களுக்கு முன் இருப்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.
- அனைவருக்கும் சமமான காலம் தான் கொடுக்கப்படுகிறது, மற்றவர்களால் சாதிக்க முடியுமானால், உங்களாலும் சாதிக்க முடியும். காரணம், ஒரு முழு கல்வியாண்டு உங்களுக்கு முன் ஒரு முழு கல்வியாண்டு இருக்கிறது.
- நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும், (பின்தங்கிய மாணவர் Average மாணவர், நன்றாக படிக்கிற மாணவர்) நீங்கள் இருக்கிற நிலையில் இருந்து அடுத்தடுத்த நிலைகளில் உயர்ந்து சாதிக்கத் தேவையான காலமாகிய ஒரு முழு கல்வியாண்டு உங்களுக்கு முன் இருப்பதை பாருங்கள்.
- தேவனுக்கு உங்களைக் குறித்த ஒரு நோக்கம் உண்டு. விசுவாசக்கண் கொண்டு பாருங்கள்.

"உங்கள் முன் இருக்கும் காலம் தான்
உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகிறது; பின் நின்றால் முன்னேற முடியாது"

"The time ahead is what will change your life; you can't move forward by staying behind."

**2. காலத்தைத் தொடருங்கள் (STAY IN STEP WITH TIME)**

- இந்த கல்வியாண்டில் எதைச் சாதிக்கப் போகிறோம். என்ன செய்யப்போகிறோம் என்பதை நோக்கித் தொடருங்கள்.
- உங்கள் இலட்சியத்தை அடைவதற்கு உங்களுக்கு முன் இருக்கும் கல்வியாண்டு உண்மையாகவே ஒரு பெரிய பொக்கிஷம் தான்.
- காலத்தை சேமித்து வைத்து, நமக்கு வசதிப்படுவது போல பயன்படுத்த முடியாது. காலமும், கடல் அலையும் காத்திருக்காது என்பது நமக்குத் தெரியும்.
- ஆகவே, காலத்தோடு சேர்ந்து ஓடப் பழகுங்கள். கவனக் குறைவாக காலத்தை வீணாக்கிவிட்டு பிறகு வருத்தப்படாதீர்கள்.
- உங்களுக்கான காலம் உங்கள் கையில் இருக்கிறது மறந்து போகாதீர்கள்.

"காலம் ஓடுகிறது–அதோடு நீங்களும் ஓடினால் தான் வெற்றியடைய முடியும்"
"Time runs - only if you run with it will life be successful."

**3. காலத்தை திட்டமிடுங்கள் (TIME NEEDS A PLAN)**

- சாதிக்க விரும்புகிறவர்கள் செய்யக்கூடாத இரண்டு காரியங்கள்.
  1. கடந்த காலத்தைக் குறித்து கவலைப்படுவதும்.
  2. எதிர்காலக் கனவில் வாழ்வதும்.

  இவை இரண்டும் காரியத்திற்கு உதவாது.
- கடந்த காலத்தை மறந்து, எதிர்காலத்தை மனதிற்கொண்டு நிகழ்காலத்தை யாரெல்லாம் பயன்படுத்துகிறார்களோ, அவர்களே சாதனையை நோக்கிச் செல்ல முடியும்.
- காலத்தை வீணாக்காதீர்கள். அறிந்தோ, அறியாமலோ உங்களுடைய நேரத்தை வீணாக்கும் Social Media-வை கவனமாக பயன்படுத்துங்கள். எதற்கும் அடிமையாகாதீர்கள்.

நேரம் அனைத்திற்கும் உள்ளது.
ஆனால் அது உங்களுக்கான என நிரூபிக்க திட்டமிடுங்கள்.
"There's time for everything; prove it's yours by planning it."

**4.காலத்தை முதலீடு செய்யுங்கள் (INVEST YOUR TIME)**

- கடைசியாக, Try to invest your time.
- ஒவ்வொரு நாளும் உங்கள் படிப்பில் எவ்வளவு நேரம் செலவிடப் போகிறீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள்.
- எந்த ஒரு சாதனைக்குப் பின்பும், அந்த சாதனைக்காக சாதனையாளர்கள் எவ்வளவு நேரம் செலவழித்தார்கள் என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம்.
- முடிந்த அளவுக்கு ஒரு நாள் கூட இடைவிடாமல் அதைப் பின்பற்றுங்கள். நிச்சயமாக கொஞ்ச நாட்களிலேயே நல்ல வித்தியாசத்தை உணர்வீர்கள்.
- படிக்க நியமித்திருக்கிற நேரத்தை ஏனோ தானோவென்று போக்கிவிடாதீர்கள். கருத்தாய் படிக்க தீர்மானம் எடுங்கள். ஏனென்றால், கடந்த முறை நீங்கள் உங்கள் இலட்சியத்தை அடைய தவறினதற்கு முக்கிய காரணம் இதுவே.
- படிக்கிற நேரத்தில் படிப்பிற்குத் தேவையான பொருட்களைத் தவிர வேறு எதையும் அருகில் வைத்துக் கொள்ளாதீர்கள்

"காலத்தை புத்திசாலித்தனமாக முதலீடு செய்யுங்கள்; அது உங்களுக்கான பலன்களை கொடுக்கும்"
"Invest your time wisely; it will yield rewards for you."

**5. காலம் தான் கடமையைச்செய்யும் : TIME IS THE PERFECT TASKMASTER**

- காலம் பொக்கிஷம் போன்றது மட்டுமல்ல, அது மிகவும் வலிமையானதும் கூட.
- காலம், அதை எவ்வளவு பயன்படுத்திக்கொள்கிறோமோ. அதற்கேற்றபடி பலன் கொடுக்கும்.
- அதைப்போல, காலத்தை எப்படி பயன்படுத்திக் கொள்கிறோமோ, அதற்கேற்றபடி பலன் கொடுக்கும்.

"நாம் காலத்தை பயன்படுத்துகிறோமோ, இல்லையா என்பதை காலமே ஒரு நாள் நமக்கு காட்டும்".
"Whether we used our time or wasted it - time itself will one day show us."

காலத்தை சரியாக பயன்படுத்தி இந்த கல்வியாண்டில் மிகப்பெரிய வெற்றியைப் பெற உங்களை வாழ்த்துகிறோம்! உங்களுக்காக ஜெபிக்கிறோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.ஆமென்!.

## உங்கள் ஆவிக்குரிய வாழ்வின் நிலையை சோதித்தறியுங்கள்!!

| ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கை | ஆரோக்கியமற்ற ஆவிக்குரிய வாழ்க்கை |
|---|---|
| ஊக்கமான ஜெபம் | மந்தமான ஜெபம் |
| வேதம் வாசித்தல் இனிமையானது | ஆர்வமில்லாத வேத வாசிப்பு |
| கர்த்தரில் முழுமையான நம்பிக்கை கொண்டிருத்தல் | பதட்டத்துடனும், சந்தேகத்துடனும் இருத்தல் |
| மற்றெல்லாவற்றையும் விட கர்த்தரை சேவித்தல் | கர்த்தரைவிட இவ்வுலக காரியங்களை அதிகமாக நேசித்தல் |
| பாவத்தை எதிர்த்தலும் வெறுத்தலும் | பாவத்தோடு சமரசம் செய்தல் |
| அனைத்திலும் தேவனை மகிமை அடையச் செய்தல் | அனைத்திலும் தற்பெருமையைத் தேடுதல் |
| இருதயத்தில் சமாதானத்துடன் இருத்தல் | இருதயத்தில் கவலை கொள்ளுதல் |
| அனைத்திலும் நன்றி செலுத்துதல் | எப்பொழுதும் முறுமுறுத்தல் |
| எப்போதும் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டிருத்தல் | எப்போதும் வருத்தத்துடனும் பெருமூச்சுடனும் இருத்தல் |
| உபத்திரவத்தில் அமைதியுடனும் பொறுமையுடனும் இருத்தல் | எளிதில் கோபம் கொள்ளுதல் |
| மற்றவர் நலத்தில் கருத்துடன் இருத்தல் | சுயநலத்தில் கருத்தாய் இருத்தல் |
| அனைத்திலும் தேவனுக்குரியதைத் தேடுதல் | எப்போதும் சுகபோக நாட்டத்துடன் இருத்தல் |
| ஆவிக்குரிய காரியங்களில் வாஞ்சையுடன் இருத்தல் | இதயத்தில் இவ்வுலக காரியங்களை இச்சித்தல் |
| பிறரைத் திடன் கொள்ளச் செய்யும் வார்த்தைகளைப் பேசுதல் | பிறரைக் குறை கூறும் வார்த்தைகளைப் பேசுதல் |
| கிறிஸ்துவுக்கு சாட்சி பகருவதில் மகிழ்ந்திருத்தல் | சாட்சியாய் இருக்க வல்லமை இழந்து கவலைப்படுதல் |
| கர்த்தரின் ஊழியத்திற்கு உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் கொடுத்தல் | உற்சாகமில்லாமலும், விருப்பமற்று கொடுத்தல் |
| பிறர் வெற்றியடையும்போது களிகூறுதல் | பிறர் வெற்றியைப் பார்த்து பொறாமை கொள்ளுதல் |
| பிறரின் துன்பத்தில் உதவிக்கரம் நீட்டுதல் | பிறர் துன்புறும் போது கண்டு கொள்ளாமலிருத்தல் |
| மன்னித்தலை விரும்புதல் | மன்னிக்க விரும்பாமலிருத்தல் |
| குணநலனுக்கு (நல் நடத்தைக்கு) முக்கியத்துவம் அளித்தல் | உடுத்துதலுக்கு முக்கியத்துவம் அளித்தல் |
| பிற பக்தியுள்ள கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் கொள்ளுதல் | உலக பிரமான நண்பர்களுடன் நட்புக்கொள்வதில் மகிழ்ச்சியடைதல் |
| கடிந்து கொள்ளுதலை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுதல் | புகழ்ந்து பேசும் வார்த்தைகளை மட்டும் விரும்புதல் |
| கர்த்தரின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருத்தல் | கர்த்தருடைய வருகையைக் குறித்து சிறிதும் சிந்திக்காது இருத்தல் |

# ஆதித்திருச்சபைகளின் ஊழியம்

உலகெங்கும் புறப்பட்டுப்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் அறிவியுங்கள் என்று இயேசு சொன்னார் (மாற்கு 16:15). ஆதித்திருச்சபை தீவிரமாக இந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்டு உண்மையாய் கீழ்படிந்தார்கள். ஆரம்ப கால சபை வேகமாக வளர்ந்து, சமுதாயத்தில் பெரிய மாற்றத்தையும், மறுரூபத்தையும் ஏற்படுத்திய விதத்தை வேதத்தில் காணலாம்.

**1. ஒவ்வொரு கிறிஸ்தவனும் (Everyone) :**

ஆதிச்சபையில் ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட விசுவாசியும் சுவிசேஷம் அறிவிக்கும் வேலையில் தாங்களாகவே ஈடுபட்டார்கள். அப்போஸ்தலர் மட்டுமல்லாமல் சிதறடிக்கப்பட்ட ஒவ்வொருவரும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர் (அப்.8:1,4). பிரதான கட்டளை (Great Commission) எல்லா மக்களுக்கும் என்பதை அவர்கள் புரிந்துகொண்டு செயல்பட்டனர் (மத்.28:18-20). இயேசு அனைவருக்கும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்கிற கட்டளையை நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார். சுவிசேஷம் அறிவிக்கிற கடமையுணர்விலிருந்து எந்தக் கிறிஸ்தவனும் விடுபட முடியாது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவை அறியாத ஒவ்வொருவருக்கும் சொல்ல வேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் என்றும், அதைப் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்றும் பவுல் கூறுகிறார் (ரோமர்1:16; 1 கொரி.9:16). இந்த ஆர்வத்தையும் வாஞ்சையையும் தேவன் நமக்கும் தருவாராக!.

**2.ஒவ்வொரு நாளும் (Everyday):**

ஆதித்திருச்சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப்.2:47). ஆதித்திருச்சபை அனுதினமும் ஊழியம் செய்கிற சபையாய் இருந்தது. அவர்கள் தினந்தோறும் இயேசுவே கிறிஸ்துவென்று இடைவிடாமல் உபதேசம் பண்ணினார்கள் என வேதம் சொல்கிறது (அப்.5:42). அதன் பலன் அனுதினமும் சபை வளர்ந்தது (அப்.16:5). உங்கள் காலை ஜெபத்தில் எப்பொழுதும் “தேவனே இன்று எனக்கு ஒரு ஆத்துமாவைத் தாரும்” என்ற ஒருவரியை சேர்த்துக்கொள்ளுங்கள். பின்னர் அதற்கான வாய்ப்பை எதிர்பாருங்கள். தினமும் தனி நபர்களோடு சாட்சி பகர்வதால் சபையும், தேவ இராஜ்யமும் வளரும். நாம் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்வராயிராமல் அனுதின கிறிஸ்தவர்களாய் இருப்போம். இயேசு சீக்கிரம் வருகிறார்.

**3. ஒவ்வொரு இடத்திலும் (Everywhere) :**

அவர்கள் புறப்பட்டுபோய் எங்கும் பிரசங்கித்தனர் என வேதம் சொல்கிறது (மாற்கு 16:20). பவுல் ஜெப ஆலயங்களிலும், சந்தை வெளிகளிலும் தினந்தோறும் உபதேசித்தார் (அப்.17:17). நாம் தெருக்களிலும், வீதிகளிலும் சென்று ஏழை, ஊனர், சப்பாணி, குருடர் யாவரையும் கட்டாயப்படுத்தி அழைத்து வரக்கட்டளை பெற்றுள்ளோம் (லூக்கா 14:21-23). பேருந்து, இரயில், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அலுவலகங்கள், விடுதிகள் எவ்விடத்திலும் எங்கும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யப் பிரயாசப்படுங்கள். கிராமங்களுக்கு குழுவாகச் சென்று ஊழியம் செய்யுங்கள் (மத்.21:2). உங்களிலிருக்கிற நம்பிக்கையை குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1பேதுரு 3:15).

**4.ஒவ்வொரு வழியிலும் (Everyway):**

எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படியாக நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்று பவுல் சொல்கிறார் (1கொரி.9:22). கிறிஸ்துவண்டை

ஆத்துமாக்களைக் கொண்டு வருவதற்கு நிறைய யுக்திகளைக் கைக்கொள்ளுங்கள் . இரட்சிக்கப்படாதவர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். அருகிலுள்ள பகுதிக்கு ஜெபநடை செல்லுங்கள். கைப்பிரதிகளைக் கொடுங்கள். எப்பொழுதும் புன்முறுவலோடு இதமான கைக்குலுக்கலோடு மக்களை சந்தியுங்கள். அக்கம் பக்கம் உள்ள சிறுவர்களை உங்கள் வீட்டில் அழைத்துப் பாடல்களையும், வேதாகமக் கதைகளையும் கற்றுக்கொடுங்கள். நண்பர்களைச் சபைக்கும். நற்செய்திக் கூட்டத்திற்கும் அழைத்துச் செல்லுங்கள். வியாதியஸ்தர்களை சந்தித்து ஜெபியுங்கள். எவ்விடத்திலும், எவருக்கும் உதவி செய்யுங்கள். பணத்தை கொஞ்சம் செலவு செய்ய ஆயத்தமாயிருங்கள். எப்படியாகிலும் சில ஆத்துமாவை திட்டமிட்டு சந்தித்து ஆதாயம் செய்யுங்கள். Win the Lost at any Cost

ஆசிரியர்

---

## வேதம் தரும் மாற்றம்

ஒரு தீவில் ஒருநாள் ஒரு நாத்திகன் கப்பல் உடைந்து கரையேறினான். அவனுடன் கப்பலில் வந்தவர்கள் யாருமே பிழைக்கவில்லை. எல்லாரும் செத்துப்போனார்கள். அந்த குளிரான தண்ணீரிலும் எப்படியோ அவன் நீந்தி கிடைத்த ஒரு கட்டையை பிடித்து அங்கு தீவில் ஒதுங்கினபோது அந்த மக்கள் அவனை அன்போடு கூட ஏற்றுக்கொண்டார்கள். அவன் உடலையெல்லாம் நன்றாக துடைத்துவிட்டார்கள். நல்ல உடைகளை கொடுத்தார்கள். கரி நெருப்பை போட்டு அவன் உடல் காய்வதற்கு அவனுக்கு உதவி செய்தார்கள்.

ஒரு பெரிய பானை எடுத்து வந்து ஆட்டை அடித்து அவனுக்கு ஒரு விருந்தை ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கிருந்த தீவினுடைய தலைவன் பைபிள் வைத்து படித்துக்கொண்டிருந்தார். நாத்திகன் அவரை பார்த்துவிட்டு இங்கேயுமா அந்த காட்டுமிராண்டி பழக்கம்? என்றான்.

அந்த தீவு தலைவன் அவனை உற்றுநோக்கி பார்த்துவிட்டு, “இங்கு பைபிள் வந்ததால்தான் அந்த பானையில் வேகிறது ஆடாயிருக்கிறது. இல்லையென்றால் நீதான் அங்கு வெந்திருப்பாய். மாம்ச பட்னிசிகளாய் இருந்த எங்களை, மனுஷரையே கொன்று குவித்து நின்றுக்கொண்டிருந்த எங்களை இன்று மனுஷனாக மாற்றினது இந்த வேதம்தான்” என்று சொன்னான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாகட்டும்.

---

## போட்டி எண் : 11 (சரியான விடைகள்)

| | | |
|---|---|---|
| 1. | சேபா | 2 சாமு. 20:1 |
| 2. | யோசபாத் | 2 சாமு.8:16 |
| 3. | பர்சிலா | 2 சாமு.19:32 |
| 4. | யோனதாப் | 2 சாமு. 13:3 |
| 5. | அகித்தோப்பேல் | 2 சாமு. 15:12 |
| 6. | ஆசகேல் | 2 சாமு. 2:18 |
| 7. | தாமார் | 2 சாமு.14:27 |
| 8. | பெனாயா | 2 சாமு. 23:20 |
| 9. | மேவிபோசேத் | 2 சாமு. 4:4 |
| 10. | பத்சேபாள் | 2 சாமு. 11:2 |
| 11. | சீமேயி | 2 சாமு. 16:5 |
| 12. | தாவீதுராஜா | 2 சாமு. 7:18 |
| 13. | யோனத்தான் | 2 சாமு. 21:21 |
| 14. | அப்சலோம் | 2 சாமு. 18:14 |
| 15. | ஈராம் | 2 சாமு. 5:11 |
| 16. | காத் | 2 சாமு. 24:11 |
| 17. | மீகாள் | 2 சாமு. 6:23 |
| 18. | அகிமாஸ் | 2 சாமு. 18:23 |
| 19. | நாகாஸ் | 2 சாமு. 10:2 |
| 20. | ரிஸ்பாள் | 2 சாமு. 3:7 |
| 21. | அபிசாய் | 2 சாமு. 23:18 |
| 22. | சீபா | 2 சாமு. 9:2 |
| 23. | யோனத்தான் | 2 சாமு. 1:26 |
| 24. | நாத்தான் | 2 சாமு. 12:25 |
| 25. | ஊசாய் | 2 சாமு. 15:37 |



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ் எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? கடந்த மாத இதழில் வெளியான சிறுவர் கதையை வாசித்து பலர் உங்கள் கருத்துக்களை தெரியப்படுத்தினீர்கள். அவைகளுக்காக தேவனைத் துதிக்கிறேன். இந்த மாதமும் பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு உங்களுக்கு கதை கூற விரும்புகிறேன். கதை கேட்க ஆயத்தமா? வாங்க போகலாம்...

ஜெர்மனியில் மிகவும் குளிரான இரவில் கன்ராடு என்பவரும் அவரது மனைவி உருசுலாவும் தங்களது ஒரே மகன் மரித்ததினால், மிகவும் துக்கத்தோடு அந்த குளிரான இரவைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்த இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு வெகு தூரத்திலிருந்து ஒரு சிறுவன் பாடும் குரல் கேட்டது. அந்த கடும் குளிரையும் பொருட்படுத்தாது எந்த சிறுவன் பாடுகிறான் என யோசித்துக்கொண்டே கணவரும் மனைவியும் குரலொழித்த திசையை நோக்கி விரைந்து சென்றனர்.

அங்கே ஒரு ஆதரவற்ற சிறுவன் கிழிந்து போன உடையுடன், கடும் குளிரில் உறைந்த நிலையில் பாட்டுப்பாடி பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். அவன் பாடுவதைக் கேட்ட அத்தம்பதியினர்,

அந்த அழகிய குரல் இந்த கடுமையான குளிரில் பாடினால் கெட்டுவிடுமே எனறு எண்ணி, அச்சிறுவனை தங்கள் வீட்டிற்குள் அழைத்தனர். கந்தைகளையும் அழுக்குத் துணிகளையும் அணிந்து, குளிரில் நடுங்கியபடி இருந்த அந்த சிறுவனின் கரத்தினை இறுக பிடித்துக்கொண்டு தங்கள் வீட்டிற்கு அழைத்து சென்றனர்.

அவனை அனலான ஓர் இடத்தில் அமரவைத்து, தங்களது மரித்த மகனின் ஞாபகார்த்தமாக அவனது உடைகளை சிறுவனிடம் கொடுத்து அணியச் செய்து, சாப்பிட ஆகாரமும் கொடுத்தார்கள்.

சாப்பிடும்போது அச்சிறுவன், தனது தந்தை மிகவும் ஏழ்மையானவரென்றும், தனக்கு உடையோ உணவோ கொடுக்க இயலாதவர் என்றும் கண்ணீர் மல்க கூறினான். இதைக் கேட்ட அந்த தம்பதியினரின் இருதயம் நெகிழ்ந்தது. தங்கள் மகனின் படுக்கையில் படுக்க வைத்தனர். அவன் தூங்கிய பிறகு, அவர்கள், தங்களது மரித்த மகனுக்கு பதிலாக அச்சிறுவனை தத்தெடுத்துக்கொள்ள முடிவு செய்தனர்.

அடுத்த நாள் காலையில் அச்சிறுவன் எழுந்தபோது, தங்கள் முடிவை அவனிடம் தெரிவித்தபோது, அவன் மிகவும் சந்தோஷப்பட்டு, சம்மதித்தான். அவர்களை அப்பா, அம்மா என அழைத்தான். அவர்களோடு கூட தங்கினான். அவர்களும் அவனை தன் மகனாகவே பார்த்து, ஒரு குறைவின்றி படிக்க வைத்தனர். பின்னர் தேவனுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்ற தேவ அழைப்பை உறுதி செய்து தன் விருப்பத்தை பெற்றோரிடம் கூறவே அவர்களும் சம்மதித்து பாதிரியார்கள் பயிலும் வேதாகம பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அனாதையாக, கடும் குளிரில் உயிருக்கு போராடிய தன்னை இத்தனை ஆண்டுகள் பராமரித்து வந்த பெற்றோருக்கு கண்ணீர் மல்க நன்றி கூறி இறைப்பணியில் காலடியெடுத்து வைத்தார். அந்த பாதிரியாரின் பெயர் என்ன தெரியுமா? அவர் தான் மார்ட்டின் லூத்தர். அவரை புராட்டஸ்டண்ட் திருச்சபைகளின் தந்தை. விசுவாச வீரன், புரட்சி போதகர் என பல்வேறு அடைமொழிகள் கொடுத்து இன்றளவும் அவரை நினைவு கூறுகின்றனர். திருச்சபை சரித்திரம் படிக்கும் ஒவ்வொருவரும் இவரது பெயரை நிச்சயம் அறிந்திருப்பார்கள்.

உலகத்தை கலக்கிய மார்ட்டின் லூத்தர் இன்றளவும் பேசப்பட முக்கிய காரணியாக இருந்த தம்பதியர் பாராட்டப்பட வேண்டியவர்கள் அல்லவா?

பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு.25:35,40) என்று இயேசு கிறிஸ்து கூறிய அற்புதமாக வாழ்க்கை பாடத்தை இங்கு நினைவுபடுத்துகிறேன்.

அன்பான தம்பி, தங்காய் ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். நான் சிறுபிள்ளை என்னால் எப்படி பிறருக்கு உதவ முடியுமென்று? எப்படியெல்லாம் உதவ முடியுமென கூறுகிறேன்.

உனக்கு கிடைக்கிற கொஞ்சம் பணத்தில் ஒரு பகுதியை சேமித்து வைத்து, உண்மையாகவே தேவையுள்ள உன் நண்பருக்கு கல்வி கட்டணம் செலுத்தலாம், தினம் தினம் பழைய ஆடையணிந்து வரும் உன் நண்பருக்கு உன் பெற்றோரின் துணையோடு ஒரு ஆடை வாங்கி கொடுக்கலாம். நடக்க இயலாதவர்கள், பார்வையற்றவர்கள் அவர்களுக்கு உதவி செய்யலாம். பேருந்தில் அமர்ந்து பயணம் செய்யும்போது உன்னருகே ஒரு வயோதிபர் அமர இடமின்றி சிரமப்படுவதை பார்க்கும்போது அவர்களை அமரவைத்து அழகு பார்க்கலாம். இப்படியாக உன்னால் இயன்ற மட்டும் பிறருக்கு உதவியாக இருங்கள். அப்பொழுது உங்கள் மூலமும் மார்ட்டின் லூத்தர்கள் போன்ற ஊழியர்கள், உயர் அதிகாரிகள், பெரும் தலைவர்கள் உருவாவது நிச்சயம்.

நன்மை செய்ய நமக்கு திராணியிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர்களுக்கு செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம். அது கர்த்தருடைய பார்வையில் பிரியமானது அல்லவா? ஒருவருடைய அத்தியாவசிய தேவையில் நாம் உதவும்போது, அவர்கள் இருதயம் நன்றியுடன் தேவனை துதிக்கும். அதன் ஆசீர்வாதம் நமது மேலும், நமது குடும்பத்தார் மேலும் என்றென்றும் நிற்கும் அல்லவா?

அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள், அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு (எபிரெயர் 13:2).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தியின் மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...



# இயேசுவின் சீஷர்களாய் பிள்ளைகளை வளருங்கள்

Rev. பெகின் சாமுவேல்
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த இதழின் வாயிலாக உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவனுடைய பெரிதான தயவினாலும், கிருபையினாலும் தமிழ் பிரதேச சிறுவர் ஊழியத்தின் மூலமாக நடைபெறுகிற அனைத்து ஊழியங்களையும் ஆசீர்வதித்து வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

பிள்ளையானவனை நடக்க வேண்டிய வழியில் அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்று நீதி.22:6-ல் வேதத்தில் வாசிக்கிறோம். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை நடக்க வேண்டிய பாதைகளை சொல்லிக் கொடுத்து வளர்க்கிறீர்களா? அல்லது ஏனோ தானோவென்று பிள்ளைகளின் மதிப்பை உணராமல் இஷ்டம் போல் விடுகிறீர்களா?

சிறுபிள்ளைகளாய் இருக்கும்போது சரியாக வளர்க்காததன் விளைவு, இன்றைய காலத்தில் ஆவிக்குரிய பிள்ளைகள் தான் உலகக் காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செய்யக்கூடாததை செய்து, போகக்கூடாத இடங்களுக்கு சென்று தங்கள் வாழ்க்கையை தொலைத்து விடுகிறார்கள். இதற்கு பெற்றோர்களும் ஒரு காரணமாகிறோம் என்பதை மறந்து விடக்கூடாது.

தேவன் கொடுத்த பொக்கிஷங்களாகிய பிள்ளைகளை இயேசுவின் சீஷர்களாய் மாறும்படி வளருங்கள். அதாவது இயேசுவை பின்பற்றுகிறவர்களாய் மாற்றுங்கள். இன்று அநேக பிள்ளைகள் உலகத்தின் அரசியல்வாதிகளையும், நடிகர்களையும், விளையாட்டு வீரர்களையும் பின்பற்றுகிறார்கள். ஏனெனில் தேவன் மேலுள்ள பற்றைக் காட்டிலும், இவர்கள் மேல்தான் அதிக பற்று காணப்படுகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எப்படி இயேசுவை பின்பற்றுகிற பிள்ளைகளாய் உருவாக்கலாம் என்று பார்ப்போம்.

### 1.பிள்ளைகளின் வளர்ப்பில் கவனமாய் இருங்கள்

வேதத்தில் மோசேயை பார்வோனின் குமாரத்தி அவனுடைய தாயிடம் கொடுத்து இந்தப் பிள்ளையை எனக்காக வளர்த்திடு என்று அவள் பொறுப்பில் விட்டபோது, மோசேயின் தாய் அவனை எகிப்தியனாக வளர்க்கவில்லை. எபிரெயனாக வளர்த்தாள். அதனுடைய விளைவுதான் எபி.11:23, 24 வசனங்களில் வாசிக்கிறோம். விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்தான். அதாவது எகிப்தின் அதிகாரம், மேன்மை, செல்வம், ஆடம்பரமான வாழ்க்கை எல்லாவற்றையும் வெறுத்துவிட்டான். காரணம் தாயின் வளர்ப்பு. நாமும் நமது பிள்ளைகளை தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாய், அவர்களை தேவனுக்குரியவர்கள் என்று வளர்க்க வேண்டும். பிரதான ஆசாரியனாகிய ஏலி தன் பிள்ளைகளை சரியாக வளர்க்கவில்லை. ஆனால் சாமுவேலின் தாய் தன்

பிள்ளையான சாமுவேலை கர்த்தருக்காக வளர்ப்பேன் என்ற மனஉறுதியுடன் வளர்த்ததால் அவன் சிறந்த தீர்க்கதரிசியாக பின்னாட்களில் தாண் முதல் பெயர்செபா மட்டும் அறியப்பட்டான்.

## 2.பிள்ளைகளின் ஆத்தும நலனில் அக்கறை செலுத்துங்கள்

பெற்றோர்களாகிய ஒவ்வொருவரும் உங்கள் பிள்ளைகளை மிகவும் நேசிக்கிறீர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அவர்களுக்காக சம்பாதிக்கிறீர்கள். சேமிக்கிறீர்கள். உலக வாழ்வையில் மேன்மையடைய உங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறீர்கள். ஆனால் உண்மையாக நேசிக்கிற பெற்றோர்கள் பிள்ளையின் உலக வாழ்க்கையை காட்டிலும் அதனுடைய மறுமையின் வாழ்வுக்காக அதிக பிரயாசப்படுவார்கள். அதாவது அவர்களுடைய ஆத்தும நலனைக் குறித்து அக்கறை கொள்ளுங்கள். பிள்ளைகளை வளர்க்கும்போது உங்கள் கண் பிள்ளையின் ஆத்துமாவை நோக்கியதாகவே இருக்கட்டும்.. தனக்கொரு ஆத்துமா இருக்கிறது அது விலையேறப்பெற்றது அது இரட்சிக்கப்பட வேண்டும் என்பதை தனது சிறுவயதில் இருந்து அந்தப் பிள்ளை கற்றுக்கொள்ளட்டும். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மத்.16:26).

## 3. தேவனை நேசிக்க உதவி செய்யுங்கள்

உங்கள் பிள்ளைகளிடம் அடிக்கடி தேவனைப் பற்றியும் அவருடைய மகத்துவத்தைக் குறித்தும் பேசுங்கள். அவர் உங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு சொல்லுங்கள். அவர்களுடைய மனதில் அது ஆழமாக பதிய இடமளியுங்கள். பாவத்தைக்குறித்தும், அது ஏற்படுத்தும் பின் விளைவுகளைக் குறித்தும் பேசுவதற்கு தயங்காதீர்கள். ஒரு பிள்ளை தேவனோடு நெருங்க எடுக்கிற முதல் அடியே ஜெபம்தான். ஜெபிக்க கற்றுக்கொடுங்கள். ஜெபத்தில் என்ன சொல்ல வேண்டும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதை காண்பியுங்கள். அநேக பிள்ளைகளுக்கு பல ஆண்டுகள் சபைக்கு வந்தும், சபையில், ஞாயிறு பள்ளிகளில் ஜெபிக்க சொன்னால் ஜெபிக்க தெரியாது, வேண்டாம் என்று மறுத்து விடுகிறார்கள். வேதத்தைக் கற்றுக்கொடுங்கள். வேதத்தை மதிக்க பிள்ளைகள் தெரிந்து கொள்ளட்டும். தினமும் ஜெபிக்கிறார்களா? வேதம் வாசிக்கிறார்களா? என்று கண்காணியுங்கள். ஒருபோதும் தேவனுக்கடுத்த காரியங்களில் சாக்குபோக்கு சொல்ல அனுமதிக்காதீர்கள். தேவனை நேசிக்கிற பிள்ளை பாவம் செய்யாது. யோசேப்பைப் போல பாவத்தை விட்டு விலகி ஓடி விடும்.

கிருபை உங்களனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்.

---

## போட்டி எண் : 11 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: முத்துகோபால்; ஜீவா; கலா ராஜம்; மெர்ஸி ராஜம்; K.சாராள்; எஸ்தர்; சாந்தி; பூங்கோதை ; கனகவல்லி; மரகதம்; பிரபா; டோரா; T. கலா; முத்துலெட்சுமி; லீதியாள்; கிறிஸ்டி; இவாஞ்சலின்; ராணி பிளஸிங்; ராதாமணி; புஷ்பவல்லி; அன்னாள்; மஞ்சு; மயில்; சுமதி; சகாய ஜெயராணி; மாது; குளோரி; விஜி; E.கலா; கிரிஜா; பியூலா; கோகிலா; பிரியா; பிரேமலதா; கிறிஸ்டிபாய்; | **ஸ்ரீவில்லிபுத்தூர்**: பாஞ்சாலி; வெங்கடவள்ளி; மாதவி; வசந்தா; கிருபா; நெல்சன் செல்வராஜ்; எஸ்தர் இந்திரா; | **திருச்சி**: மரியா; ஜஸ்டஸ் டேனியல்; சாந்தி ஆனந்தன்; கிறிஸ்டி மகாலெட்சுமி; வசந்தி முத்து; R.சாந்தி; மெர்சி சாமுவேல்; லேயாள்; | **திருநின்றவூர்**: ரோஸ்லின் மேரி; தெரசா; எஸ்தர் பவானி; சுகந்தி சாம்சன் சரவணன்;

## போட்டி எண் : 11 (சரியான விடை எழுதியவர்கள்...)

காத்ரின்; எழிலரசி; | **ஆறுமுகநேரி**: அனிதா; அனன்சி அருண்; செல்வபிரியா; ஜோதி மீனா; பாக்கியா; | **இராதாபுரம்** : அருள்செல்வி; ஜெமிமா; நித்யா; மல்லிகா; ஜாஸ்மின் | **கடையநல்லூர்**: செல்வி கண்ணன்; பெல்சியா; சத்யா சுரேஷ்; தங்கராஜ்; செல்வி இந்திராணி; | **தேனி**: செண்பகபுஷ்பா; கிருபா; கார்த்திகேயாயினி; திருவியச்செல்வி; தபீத்தாள் ராணி; |**ஸ்பிக் நகர்**: ஜெப்ரினா; சதீஷ் பிரதீபா; கலைச்செல்வி; பிரான்சிஸ் சவுசல்யா; ஆரோக்கிய மேரி; | **கோயம்புத்தூர்**: மேரி டென்சில்; கிறிஸ்டினா அபிகாயில்; எஸ்தர் விஜய்; நித்யா பெர்க்மான்ஸ் | **வேப்பம்பட்டு**: செல்வி அமலன்; லூர்து மாதா; ஜோஸ் | **மேரி பாளையம்**; ஆர்த்தி; | **பெருங்குளம்**: கௌசல்யா; அருள்குமார்; பியூலா ஜோபாய்; ஜெபா ராஜா; | **மடத்துக்குளம்**: ஸ்டெல்லா மேரி; மல்லிகா; சேர்மக்கனி; ரூத்; பரிமளா; | **சேத்துப்பட்டு**: லெஷ்மிகாந்த்; ஜெயராணி; சுகந்தி பெனடிக்; ரெக்ஸி ஈஸ்வரன்; ஜெபா விஜய்; | **எடப்பாடி**: பிருந்தா ஸ்ரீ; ரூத் போவாஸ்; சத்யா மூர்த்தி; | **மம்சாபுரம்**: ஷாலினி; சில்வியா விண்ணரசி; பொண்ணி; | **கள்ளக்குறிச்சி**: தங்கம் சாக்கோ; யெஷுரன்; மகேஸ்வரி; | **நாகலாபுரம்**: சாராள்; ஷாலோம் இண்பெண்ட் சுஜந்த்; குளோரி அம்மாள்; | **மதுராந்தகம்**: புனிதா; சத்யா; சரண்யா; ரேணுகா; |**மோரை**: சந்திரா; | **இராமன்புதூர்**: ஜான்சி ராணி; லீதியாள்; அன்னம்மாள்; |**ஆலங்குளம்**: ஸ்டெல்லா மேரி; மரியாள்; R.V.பிளாரன்ஸ்| **பரமத்திவேலூர்**; பாமா; ஸ்ரீசௌமிளா; திருச்செல்வி ; |**இளையரசனேந்தல்**: டெய்சிராணி; ஜோன் ஆப் ஆர்க்; ஜெஸி; |**தர்மபுரி**: ஜாஸ்மின் அ.மாதம்மாள்; ரூத்; |**சென்னை**: மெர்லின் ஹெலன் பிரிதியா; கரோலின் ராஜகுமாரி; ஏஞ்சலாராஜன்; **உடுமலைப்பேட்டை**: சூசன்னாள்; ஜெயந்தி; |**இறச்சகுளம்**: ஜெஸ்மின்; ராதிகா; |**மதுரை**: மெர்லின் ஷீபா; ரூத்மீனா;| **கவரைப்பேட்டை**: புவனா; மணிமேகலை; |**சுரண்டை**: குளோரி ஞானம்; ஜெயமேரி;| **வீரபாண்டிய பட்டணம்**: சுகிர்தா டைட்டஸ்; தேவதாஸ்; |**ஓசூர்**: ஜெமிந்தா; பரிமளா; |**நாசரேத்**: எஸ்தர்; மெர்சி; |**தூத்துக்குடி**: வெர்ஜின்; இவாஞ்சலின்; புருசிமா; |**நாகமலை**: விஜிலா; ஆனந்தி; |**பாளையங்கோட்டை**: சாந்த குமாரி; கலா பிரசாத்; |**கடாட்சபுரம்**: சுசிலா; ரேவதி கில்பர்ட்; |**நாகப்பட்டிணம்**: ஜான்வெஸ்லி பிரிஸ்ல்லா; வின்சென்ட்ராஜ்; |**மேலஅனுப்பானடி**: அனிதா; ஜெயா; |**கோவில்பட்டி**: வால்டர்சிங்; செல்வின்பால்; |**மூக்குப்பேறி**: செல்லத்தாய் ராணி; |**பெரியகுளம்**: ஜேம்ஸ் மேரி; |**வெண்ணாம்பட்டி**: எப்சிபா; |**ராசினாம்பட்டி**: கிரேஸ்; **அய்யப்பாக்கம்**: அம்மணி; **பெரமனூர்**: ஜான்சிராணி; |**விடூர்**: ஆரோன் அருண்குமார்; **கல்லுக்குழி**: டால்டன்; |**ஆம்பூர்**: கிரிஜா சந்தியா; |**ஆண்டிபட்டி**: புளோரியா; **காசிமேஜர்புரம்**: ரூத்; |**வில்லன்குறிச்சி**: கிறிஸ்டினா; |**பழனி**: ஆபிரகாம்; பிரிஸ்ஸில்லா; |**கம்பம்**: ஜோதிமணி; |**உசிலம்பட்டி**: லீலாபாய்;|**ஆல்வார்திருநகரி**: பனிமலர்;|**K.P.வலசை**: சீலி; **கொத்திமங்களம்**; உமாதேவஜோதி; சேரன்மகாதேவி: ஜெபஸ்ஜெபா; |**அகஸ்தியர்பட்டி**: நிர்மலா; |**முக்கூடல்**: முத்துக்கிருஷ்ணன்; |**ராதாபுரம்**: ஜெயா; |**கல்லல்**: அபிஷாக்; |**களக்காடு**: விமலா டேனியல்; |**கட்டபெட்டு**: புஸ்பமாலா; |**கூடல்நகர்**: கணபதி; |**வில்லியனூர்**: செல்லப்பன்; |**சேலம்**: பெட்ரிஷியா டேவிட்; |**புளியங்குடி**: சுந்தரி; ஜெயமணி; |**கௌரிவாக்கம்**: சின்னராஜீ; |**கடம்பன்குளம்**: தமிழ்செல்வி; |**உக்கிரன்கோட்டை**: குழந்தை திரசம்மாள்; |**காமராஜபுரம்**: மரகதலீலா; |**கூவத்தூர்**: எட்வர்ட்; |**அகரம்தென்**: ஜான்சிராணி; |**நத்தக்காடையூர்**: ஏசையன்; |**வேலூர்**: ரூபி மனோகரன்; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**இடைகால்**: செல்வி ஜான்சன்; |**ரெட்ஹில்ஸ்**: R.ஆஷா; |**திரேஸ்புரம்**: சில்வெஸ்டர்; |**பாவூர்சத்திரம்**: ஜெசிலி; |**பள்ளிக்கரணை**: பொன்செல்வி; |**அச்சிறுப்பாக்கம்**: தமிழ்ச்செல்வி; |**ஜலகண்டபுரம்**: கவிதா; வீராணம் செல்வின்; **திசையன்விளை**: செல்வபாக்கியம்; **அச்சரப்பாக்கம்**: செல்வகுமாரி; **கொட்டிவாக்கம்**: அமுதவல்லி; **வெள்ளகால்**: S.கலா; |**அரும்பாக்கம்**: எடிசன் பெண்னாலி; |**ஏர்வாடி**: மரகதம்: |**சொக்கன் குடியிருப்பு**: ஜான்சிராணி: **அரியலூர்**:செல்வமணி

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-12
## 1 இராஜாக்கள் (இருப்பிடத்துடன் விடை எழுதவும்)

1. காரிய சமர்த்தனான இவன் யார்?
2. ஏதோமிலிருந்த ராஜகுலமானவன் யார்?
3. சாகும்படி கல்லெறிந்து கொல்லப்பட்டவன் யார்?
4. மரவெட்டு வேலை அறிந்தவர்கள் யார்?
5. ஏழுநாள் ராஜாவாயிருந்தவன் யார்?
6. நிம்சியின் குமாரன் யார்?
7. நாற்பத்தொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம் பண்ணினவன் யார்?
8. ஆயிரம் சார்வாங்க தகனபலிகளை செலுத்தினவன் யார்?
9. முப்பத்தைந்து வயதில் ராஜாவானவன் யார்?
10. பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டவன் யார்?
11. திஸ்பியனாகிய இவன் யார்?
12. ஆகாபின் அரமனை விசாரிப்புக்காரன் யார்?
13. ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன் அனுப்பியிருந்தவன் யார்?
14. பென்யமீனனாகிய கேராவின் மகன் யார்?
15. ராஜாவின் பிரதானியும் இஷ்டனுமாயிருந்தவன் யார்?
16. தீருவிலிந்து அழைக்கப்பட்டவன் யார்?
17. ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தவன் யார்?
18. வெகு அழகாயிருந்த பெண் யார்?
19. பகுதி விசாரிப்புக்காரனாகிய இவன் யார்?
20. யெரொபெயாமின் குமாரனாகிய இவன் யார்?
21. சீரியாவின் ராஜாவாகிய இவன் யார்?
22. ஏத்தானிம் மாதத்துப் பண்டிகையிலே ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கூடிவந்தவர்கள் யார்?

**குறிப்பு : விடை எழுதுபவர்கள்**
**உங்களுடைய பெயர், முகவரியை தெளிவாக எழுதவும்.**

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.08.2025



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## விருதுநகர் மண்டல மிஷன் கன்வென்ஷன்




## பாண்டிச்சேரி வடக்கு மண்டல பெண்கள் முகாம்






## போதகர்களின் பிள்ளைகளுக்கான முகாம்






Registered News Paper Regd. No. 8206 / 62




## எழுப்புதலின் 10 ஆண்டுகள்

## DECADE OF REVIVAL
## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664